# தமிழ் சொல்
# TAMIL SOUL

Volume : 1 | Issue : 2 | May 2024 | Chennai | Pages : 8 | Price : 8.00 | (Tamil Monthly)

மலர் : 1 | இதழ் : 2 | மே 2024 | சென்னை | பக்கம் : 8 | விலை : ரூ.8.00 | (தமிழ் மாத இதழ்)


# 3 ஆண்டுகள் - 6115 புத்தொழில் நிறுவனங்கள்!

## திராவிட மாடல் அரசின் மகத்தான சாதனை –முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



திராவிட மாடல் அரசில் கடந்த மூன்றாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகளின் விளைவாக புத்தொழில் நிறுவனங்கள் (Startups) அமைவதற்கான உகந்த சூழலை உருவாக்குவதில் நாட்டிலேயே தலைசிறந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பது பெருமகிழ்ச்சிக்குரியது.

அந்த வெற்றியைத் தக்க வைக்கும் நோக்கோடு உலகில் பல்வேறு பகுதிகளில் முத்திரை பதித்த முன்னணி புத்தொழில் நிறுவனங்களும், இளம் தொழில்முனைவோரும் கலந்து கொள்ளும் வகையில் உலகப் புத்தொழில் மாநாடு (Global Startup Summit) வரும் 2025—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின் மூலம் புத்தொழில் வளர்ச்சியில் திராவிட மாடல் அரசு செலுத்தி வரும் ஆர்வமும் அக்கறையும் எளிதில் விளங்கும்.

அதாவது, 2021—இல் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நிலையில் தமிழ்நாட்டிலிருந்த புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2105 மட்டுமே. மூன்றாண்டுகளாக இந்த அரசு புத்தொழில் நிறுவனங்களுக்கு அளித்து வரும் மிகப்பெரிய ஊக்கம் காரணமாகவே 2021—க்குப் பிறகு 6,115 புத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்கிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்திட வேண்டும் என்னும் குறிக்கோளின் அடிப்படையிலும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி வரும் தொழில் வளர்ச்சியின் சாதனைக் குறியீடாகவே திகழ்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் புத்தாக்கத் தொழில் வளர்ச்சிக்காக கோவையில் 2023 ஆகஸ்டு திங்களில் நடத்திய தமிழ்நாடு புத்தொழில் திருவிழா 2023 மாபெரும் வெற்றி கண்டது.

இதில், 21,556 பேர் பங்கேற்றனர். 18,835 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். 1,761 பிரதிநிதிகளும், 841 கண்காட்சி அமைப்பாளர்களும் இத்திருவிழா நிகழ்ச்சிகளில் இடம் பெற்றனர். 83 உற்பத்திப் பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 67 புத்தொழில் நிறுவனங்கள் மூலம் 6,251 பொருள்கள் தயாரிக்கும் திட்டங்கள் முன்மொழியப்பட்டன. அவைகளில், 3 கோடியே 64 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1,674 தொழில்களைத் தொடங்கிட தொழில் முகவர்கள் முன்வந்தனர்.

மகளிர் புத்தாக்கத் தொழில் முயற்சிகள் 18 மகளிர் சுய உதவிக் குழுக்கள் புத்தாக்கத் தொழில் கூடங்களாக மாறியுள்ளன. 25 மகளிர் தொழில் முகவர்கள் புத்தாக்கத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

**வேலைவாய்ப்புகள்**

தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் துறை நிதியுதவியால் தொடங்கப்பட்ட புத்தாக்கத் தொழில்கள் மூலம் 150 வேலைவாய்ப்புகளும், டான்சீட் நிதியுதவியில் தொடங்கப்பட்ட புத்தாக்கத் தொழில்கள் மூலம் 1,525 வேலைவாய்ப்புகளும் வேறுபல புத்தாக்கத் தொழில்கள் மூலம் 238 வேலைவாய்ப்புகளும் என மொத்தம் 1,913 புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**முதலீடுகள் உயர்வு**

டான்சீட் நிதியுதவியில் தொடங்கப்பட்ட புத்தாக்கத் தொழில்களில் 314.30 கோடி ரூபாய் முதலீடுகள் உயர்ந்துள்ளன.

தமிழ்நாடு நிதித் தளம் (TANFUND PLATFORM) வாயிலாக 714 முதலீட்டாளர்களுடன் இணைந்துள்ள புத்தாக்கத் தொழில்களின் நிதி 26 கோடியே 40 இலட்சம் என உயர்ந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் புத்தாக்கத் தொழில்களுக்கு நிதியுதவி அளித்திட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி எச்.டி.எப்.சி வங்கி, டி.பி.எஸ் வங்கி, பெடரல் வங்கி, எஸ்.வங்கி, யுகோ வங்கி ஆகிய வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

**பயிற்சிகள்**

புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் அளித்திட 5,393 பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சிப்காட் தொழிற் பூங்காக்களில் புத்தாக்க மையங்கள் திருப்பெரும்புதூர், ஓசூர் சிப்காட் தொழிற் பூங்காக்களில் புத்தாக்க மையங்கள் 33.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனம் நிறுவப்பட்டு, புத்தாக்கத் தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு பெரிதும் ஊக்கம் அளித்து வளரும் நிலையிலுள்ள புத்தாக்கத் தொழில்களின் மேம்பாட்டிற்கு உதவும் ஊக்க மையங்கள் (INCUBATION CENTRE)

புத்தாக்கத் தொழில் வளர்ச்சிக்கான 5 ஊக்க மையங்களுக்கு சிங்கப்பூரிலுள்ள ஸ்விட்ச் (SWITCH) தொழில் நிறுவனத்திற்குச் சென்று அதன் செயல்பாடுகளைஅறிந்து பயன்பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

15 புத்தாக்கத் தொழில் ஊக்க மையங்களின் வளர்ச்சிக்காக அவை ஒவ்வொன்றுக்கும் 5 இலட்சம் ரூபாய் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு தொழில் ஊக்க வளர்ச்சி மையங்களின் முதிர்வு மாதிரி தயாரிப்பதில் 55 ஊக்க மையங்கள் (incubetter) பயன்பட்டன.

புத்தாக்கத் தொழில்களுக்கான போர்ட்டல் 29.2.2024 அன்று ஏற்படுத்தப்பட்டது. அது முதல், 78 புத்தாக்கத் தொழில்கள் இதில் இணைந்துள்ளன.

இப்படிப் பல்வேறு முயற்சிகளை முனைப்புடன் மேற்கொண்டு வருவதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புத்தாக்கத் தொழில்கள் வளர்ச்சியில் மாபெரும் சாதனைகள் படைத்து வருகிறார் என்று பலரும் பாராட்டுகின்றனர்.

# ஊடகவியலாளர்களுக்கு திராவிட மாடல் அரசு அளித்த உதவிகள்!

## மே–3 உலகப் பத்திரிகை சுதந்திர நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!




உலகப் பத்திரிகை சுதந்திர நாளினை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பத்திரிகையாளர்களுக்கு வாழ்த்துச் செய்தியினை வெளியிட்டுள்ளார். மேலும் அவர்களுக்கு திராவிட மாடல் செய்த உதவிகளையும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "1992—இல் வின்ட்ஹோக்கில் ஆப்பிரிக்க நாளிதழ் செய்தியாளர்கள் ஒன்றிணைந்து பத்திரிகை சுதந்திரம் குறித்து வெளியிட்ட அறிக்கையின் நினைவாக, மே 3—ஆம் நாளை ஐக்கிய நாடுகள் அவையின் பொதுப்பேரவை 'உலகப் பத்திரிகை சுதந்திர நாள்'—ஆக 1993—ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது. இந்நாள் பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வளர்க்கப் பயன்படுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பத்திரிகைச் சுதந்திரம் முழு அளவில் பேணப்படுகிறது.

2021—இல் கழக அரசு பொறுப்பேற்ற வேளையில் உலகம் முழுதும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா தொற்றுக் காலத்தில் தமிழ்நாட்டில் செய்தி சேகரிப்பதில் அச்சமின்றி இரவும் பகலும் பாடுபட்ட செய்தியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்துப் பல்வேறு உதவிகள் அளிக்கப்பட்டன.

கொரோனா சிறப்பு ஊக்கத் தொகையை ரூ.3 ஆயிரத்திலிருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்கியது.

கொரோனா இழப்பீட்டுத் தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கியது.

உலகப் பத்திரிகை சுதந்திர நாள் ; ஊடகவியலாளருக்கு திராவிட மாடல் அரசு அளித்த உதவிகள் என்னென்ன ?

பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு 3,223 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ப்பு.

பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.10,000 லிருந்து ரூ.12,000 ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000 லிருந்து ரூ.6,000 ஆகவும் உயர்வு.

பணிக்காலத்தில் இயற்கை எய்திடும் பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவித் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு.

சிறந்த இதழியலாளருக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழுடன் கூடிய 'கலைஞர் எழுதுகோல் விருது' ஆண்டுதோறும் அறிவிப்பு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு பெண்மையைப் போற் றும் வகையில் சிறப்பினமாக இவ்வாண்டு மட்டும் கூடுதலாக ஒரு பெண் இதழியலாள ருக்கு கலைஞர் எழுது கோல் விருது வழங்க ஆணை பிறப்பிப்பு.

பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிக் கொடை மற்றும் பணிக் கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட் சமாக உயர்வு.

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுவரும் மருத்துவ உதவித் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ2 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்வு, பத்திரிகையாளர்களுக்கென சிறப்பு மருத்துவ முகாம்கள்.

எனப் பத்திரிகையாளர்கள், செய்தி ஊடகவியலாளர்கள் திராவிட மாடல் அரசினால் பாதுகாக்கப்பட்டு போற்றப்படும் வேளையில் கடைப்பிடிக்கப்படும் உலக பத்திரிகை சுதந்திர நாளில் திராவிட மாடல் அரசின் சார்பில் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்"என அதில் கூறப்பட்டுள்ளது.



**தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில் கேண்டிடேட்ஸ் தொடரில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீரர் குகேஷ் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.75 லட்சத்திற்கான காசோலை மற்றும் கேடயத்தையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் குகேஷ் பெற்றோர் ஆகியோர் உடனிருந்தனர்.**

# எகிறும் வெப்ப அலையை எதிர்கொள்வது எப்படி?

தமிழகம் முழுவதிலும் கோடைகால வெப்பஅலை ஆக்ரோஷம் காட்டி வருகிறது. வெளியில் சென்றாலே அனல் காற்று முகத்தில் அறைகிறது. எந்த ஆண்டிலும் இல்லாமல் இந்த ஆண்டில் அக்னி காலம் ஆரம்பிக்கும் முன்பே வெயிலின் தாக்கம் பலமடங்கு அதிகரித்திருக்கிறது. அதனால் பலதரப்பட்ட வெப்ப நோய்களும் அதிகரித் துள்ளன.

கொளுத்தும் கோடை வெயில் வயது வித்தியாசமின்றி அனைவரையும் பாதிக்கி றது. அதிலும் முக்கியமாக, சாலையில் செல் லும் முதியோர்கள் திடீர் திடீரென்று மயங்கி விழும் செய்திகள் ஊடகங்களில் உலா வந்து மற்ற வர்களுக்கும் பீதி கொடுக் கின்றது. இந்தியா வில் இதுவரை 30,000 பேர் வரை வெப்பத்தாக்கு தலால் உயிரிழந்துள் ளதாகப் புள்ளிவிவரம் கூறுகிறது. இந்தச் சூழ லில் கோடை வெயில் கொடுக்கும் முக்கிய மான உடல் பாதிப்புகளை யும் அவற்றைச் சமாளிக்கும் வழிகளையும் தெரிந்து கொள்வது நல்லது.



**வெப்ப அலையால் ஹீட் ஸ்ட்ரோக் ஏற்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்த வடமாநில இளைஞர்**

### உடலில் ஏற்படும் நீரிழப்பு

தகிக்கும் வெயில் காரணமாக உடலில் நீர்ச்சத்து குறைந்து, நீரிழப்பு ஏற்படுகிறது. உடலுக்குத் தேவையான தாதுச்சத்துகள் குறைந்துவிடுகின்றன. இதனால், நாக்கு வறட்சி அடைந்து தாகம் அதிகரிக்கிறது. தொண்டை காய்கிறது. உடலில் அசதி ஆட் கொள்கிறது. கண்கள் எரிகின்றன. கைகால் தசைகள் இறுக்கம் அடை கின்றன. முக்கி யமாக, அடிவயிறு இழுத்துப் பிடிப்பதுபோல் இருக்கிறது. கெண்டைக்கால் தசைகள் அடிக்கடி இழுத்துக்கொள்கின்றன. சிறுநீர் செல்வது குறைந்து எரிச்சல் உண்டா கிறது.

### நீர்க்கடுப்பு

கோடையில் சிறுநீர்க்கடுப்பு அதிக தொல்லை தருகிறது. அளவுக்கு மீறி வியர்வை வெளியேறுவதும் தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிக்காததும்தான் இதற்கு முக்கி யக் காரணங்கள். குடிக்கும் தண்ணீரின் அளவு குறைந்தால் சிறுநீரின் அளவும் குறைந்துவிடும். இதனால் சிறுநீரில் வெளி யேற வேண்டிய பல உப்புகள் படிகங்களாக மாறி சிறுநீர்ப்பாதையில் படிந்துவிடும். அப்போது நீர்க்கடுப்பு ஏற்படும். நிறைய தண் ணீர் குடித்தால் இந்தப் பிரச்சனை சரி யாகிவிடும். என்றாலும், அடிக்கடி நீர்க் கடுப்பு வந்தால், சிறுநீர்ப்பாதையில் நோய்த் தொற்று அல்லது சிறுநீரகக்கல் இருக்க வாய்ப்புள்ளது.

### வெப்ப மயக்கம்

வெயிலின் தகிப்பு கடுமையாக இருக்கும்போது வெயிலில் நீண்ட நேரம் வேலை செய்கிறவர்களுக்கும் சாலையில் நடந்து செல்லும் வயதானவர்களுக்கும் உட லின் வெப்பம் 106 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கு மேல் தாண்டிவிடும். அப்போது உடல் தளர்ச்சி அடையும். களைப்பு உண்டாகும். நிறைய வியர்க்கும். தண்ணீர்த் தாகம் அதிக மாக இருக்கும். தலைவலி, வாந்தி, தலைச் சுற்றல் போன்ற அறிகுறிகள் தோன்றும். இதற்கு 'வெப்பத் தளர்ச்சி' (Heat Exhaustion) என்று பெயர்.

இந்த நேரத்தில் அவர்கள் நிழலுக்கு வந்து ஓய்வெடுத்துக்கொண்டு, போதிய அள வுக்குத் திரவ ஆகாரங்களைக் குடித்து விட் டால் தளர்ச்சி குறைந்துவிடும். தவறினால், திடீரென்று உடல் வியர்த்து மயக்கம் வந்து விடும். இது 'வெப்ப மயக்க'த்தின் (Heat Syncope) விளைவு.

### வயிற்றுப்போக்கும் டைபாய்டும்

கோடையில் சமைத்த உணவுகள் விரை வில் கெட்டுவிடும். அவற்றில் கிருமிகள் சீக்கி ரத்தில் வளர்ந்துவிடும். இந்த உணவுகளை உண்பதால் பலருக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு, சீதபேதி, காலரா, மஞ்சள்காமாலை போன்ற நோய்கள் வரும். மற்ற காலங்களை விடக் கோடையில் டைபாய்டு காய்ச்சல் வருவது அதிகம். சுகாதாரம் குறைந்த உணவும் தண்ணீரும்தான் டைபாய்டு வருவதற்கு முக்கியக் காரணங்கள்.

### வேனல்கட்டியும் புண்களும்

கோடைக் காலத்தில் நம் உடலின் வெப்பத் தைக் குறைப்பதற்கு இயற்கையிலேயே அதிக அளவில் உடல் வியர்க்கிறது. அப்போது உடலைச் சுத்தமாகப் பராமரிக்காவிட்டால், சருமத்தில் உள்ள வியர்வைச் சுரப்பிகளில் அழுக்கு சேர்ந்து அடைத் துக்கொள்ளும். இதனால், வியர்க்குரு வரும். வெயில் காலத்தில் தினமும் இரு வேளை குளித்தால் வியர்க்குரு வராது. குளித்து முடித்த பின் வியர்க்குரு பவுடர், காலமின் லோஷன் அல்லது சந்தனத்தைப் பூசலாம்.

கொட்டும் வியர்வை காரணமாக சிலருக் குச் சருமத்தின் மூலம் வெளியேற வேண்டிய உப்பு, யூரியா போன்றவை சரி யாக வெளியேற முடியாமல் வியக்குருவில் அழுக்குபோல் தங்கி விடும். வேனல் கட்டி வரும். மற்ற வயதினரை விட, குழந்தைகளுக் கும் நீரிழிவு நோயாளிகளுக் கும் கோடைக் காலத்தில் அடிக்கடி சருமத்தில் புண்கள் வந்து சீழ் பிடிக்கும். ஆன்டிபயாடிக் மருந்துகள், வலி நிவாரணிகள், வெளிப்பூச்சுக் களிம்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினால், இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம்.

### சருமத்தில் எரிச்சல்

வெயில் கொளுத்தும்போது புற ஊதாக் கதிர்களின் உக்கிரத்தைத் தாங்கமுடி யாமல், சருமமும் அதைச் சார்ந்த ரத்தக் குழாய்களும் விரிந்து சிவந்துவிடும். இதன் விளைவால் சருமத்தில் எரிச்சலும் வலியும் ஏற்படும். 'வெப்பப் புண்' (Sun Burn) என்று அழைக்கப்படும் இந்தப் பிரச்சனையை எளிதில் தடுத்துவிடவும் முடியும். வெயி லில் செல்வதற்கு முன்பாக, உடலில் வெளியே தெரியும் பகுதிகளில் சன்ஸ்கிரீன் லோஷ னைத் தடவி, அரை மணி நேரம் கழித்துச் செல்வது, புற ஊதாக் கதிர்வீச்சிலிருந்து சருமத்தைப் பாதுகாக்க உதவும் எளிய வழி.

அதுமட்டுமல்லாமல், பருத்தி ஆடை களை அணிவதும், சருமத்தை முழுமையாக மறைக்கக்கூடிய குளோஸ் நெக் மற்றும் முழுக்கை பருத்தி ஆடைகளை அணிவதும் சருமத்துக்குப் பாதுகாப்பு தரும் கவசங்கள்.

### சூரிய ஒளி ஒவ்வாமை

உணவு ஒவ்வாமை, மருந்து ஒவ்வாமை என்று இருப்பதுபோல், ஒரு சிலருக்கு சூரிய ஒளியே ஒவ்வாமையை உண்டாக்கும். இவர்கள் வெயிலுக்குச் சென்றுவிட்டால் போதும், உடலெங்கும் அரிக்கத் தொடங்கி விடும். சருமம் சிவந்து வட்ட வட்டமாகத் தடிப்பு கள் தோன் றும். அவற்றில் நீர் கோத்துக் கொள்ளும். இதைத் தொடர்ந்து சருமம் உரியும். 'சோலார் அர்ட்டி கேரியா' (Solar Urticaria) என்று அழைக்கப்படும் இந்தத் தொல்லையைத் தடுக்க 'சன் பிளாக்' லோஷன்களைப் பயன்படுத்த வேண்டும்.

### வெப்ப அலைகளை வெல்வது எப்படி?

கோடை வெயிலை சமாளிக்கவும், வெப்ப நோய்கள் வராமல் தடுக்கவும் 3லிருந்து 4 லிட்டர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். ஏசி அறையில் வேலை பார்த்தாலும் இந்த அளவுக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும். காபி, தேநீர் மற்றும் வாயு நிரப்பப்பட்ட செயற்கை மென்பானங்களைக் குடிப்பதைவிட மோர், பதநீர், பழச்சாறு, பானகம், இளநீர் ஆகிய இயற்கை பானங்கள் குடிப்பதை அதிகப் படுத்துங்கள். எலுமிச்சைச் சாற்றில் உப்பு



சேர்த்துக் குடிப்பதும், சர்பத் குடிப்பதும், இஞ்சி கலந்த மூலிகைத் தேநீர் அருந்துவதும் நல்லது. தர்பூசணி, நுங்கு, கொய்யா, பப்பாளி, சாத்துக்குடி ஆரஞ்சு, திராட்சை, கிர்ணி, மாதுளை போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களையோ பழச்சாறுக ளையோ அடிக்கடி சாப்பிடுங்கள். வெயிலை எதிர்கொள்ள அற்புத நிவாரணி வெள்ளரி. அதை இளம்பிஞ்சாகவோ, பழமாகவோ, பச்சடியாகவோ, சாலட்டாகவோ சாப்பிடுங்கள். கோடையில் மாம்பழம் வேண்டவே வேண்டாம்.

வெயில் காலத்தில் தினமும் இரு வேளை குளிப்பதும் தளர்வான பருத்தி ஆடைகளை அணிவதும் நல்லது. வீட்டின் மொட்டை மாடி யில் ஓலைக் கூரையால் மேற்கூரை அமைப்பது வெப்பத்தைக் குறைக்கும். வெளியில் செல்லும் போது தொப்பி/ கறுப்புக் குடை யோடும் தண் ணீர் பாட்டிலோடும்தான் செல்ல வேண்டும். முடிந்தவரை நிழலில் செல்வது நல்லது. குழந்தை கள், முதியவர்கள், கர்ப்பிணி கள், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், இதய நோயாளிகள், உடல்நலம் குறைந்தவர்கள் வெயிலில் அலைவது கூடாது. இருச்சக்கர வாகனங்களில் வெயிலில் அதிக நேரம் பயணிப்பவர்கள் கண்களுக்குச் சூரியக் கண்ணாடியை (Sunglass) அணிந்து கொள்ளலாம். கோடையில் ஜிம் போன்ற கடுமை யான உடற்பயிற்சிகள் அதிகம் வேண்டாம்.

வெயில் காலத்தில் குளிர்சாதனப் பெட்டி யின் உபயோகத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். உடனுக்குடன் சமைத்துச் சாப்பிடுங்கள். தாகம் தணிக்க மண்பானைத் தண்ணீர் குடியுங்கள். காரம், மசாலா நிறைந்த உணவுகள், மைதா உணவுகள், எண்ணெய்ப் பலகாரங்கள், பேக்கரிப் பண்டங்கள், பாக்கெட் உணவுகள், துரித உணவு கள், அசைவம் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

இட்லி, இடியாப்பம், தயிர்ச்சாதம், மோர்ச் சாதம், கம்பங்கூழ், கேப்பைக்கூழ், வெங்காயப் பச்சடி, கீரைகள், பீட்ரூட், காரட், முள்ளங்கி, பாகல், தக்காளி, நூல் கோல், பீர்க்கை, புடலை ஆகியவை சிறந்த கோடை உணவுகள். இவற்றை அதிகப் படுத்துங்கள். வெளியிடங்களில் அடிக்கடி சாப்பிடுவதைத் தவிருங்கள். வெயிலுக்கு இதம் தருவது வீட்டுச் சாப்பாடுதான் என்பதை உண ருங்கள். நலம் தரும் பழங்களும் நிழல் தரும் மரங்க ளும் கோடை வெயிலைச் சமாளிக்க உதவும் மிக முக்கிய அரண்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

# காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த தவறினால் 200 கோடி குழந்தைகள் பாதிக்கப்படும் அபாயம்!

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் இந்த ஆண்டு ஏற்படக்கூடிய அதீத வெப்ப அலையில் சிக்கி கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தி யங்களில் உள்ள 24 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பெரியவர்களைவிட குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுவர். அதீத வெப்ப அலை அவர்க ளுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். ஆகையால் இந்த கோடை காலத்தில் நாம் குழந்தைகளைப் பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான யுனிசெப் இயக்கு நர் டெபோரா கோமினி தெரிவித்துள்ளார். அதீத வெப்ப அலை காரணமாக குழந்தைகளுக்கு சுவாசப் பாதை நோய்கள், வெப்பம் சார்ந்த நோய்கள், ஆஸ்துமா, இருதய நோய்களால் ஏற்படலாம் என்றும் அவர் எச்சரிக்கிறார்.




சர்வதேச சராசரி வெப்பநிலை கடந்த மார்ச் மாதத்தோடு தொடர்ச்சியாக 10வது மாதமாக அதிகமாக பதிவாகியுள்ளது. இதனால் புவியின் வடக்கு மற்றும் தெற்கு அரைக்கோளம் பகுதி களில் உள்ள நாடுகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் உச்சம் கண்டுள்ளது. இந்நிலையில் தான் யுனிசெப் குழந்தைகளுக்கான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில், சில தென்கிழக்கு ஆசிய நாடுகள் அதீத வெப்பம் தொடர்பாக இப்போதே அறிவுரைகளை வழங்கத் தொடங்கியுள்ளன. அந்த வகையில், தாய்லாந்து நாட்டின் பொதுச் சுகாதா ரத் துறை மக்கள் ஹீட் ஸ்ட்ரோக் ஏற்படாமல் தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

பிலிப்பைன்ஸில் அதீத வெயில் காரணமாக நேரடி வகுப்புகள் பள்ளிகளில் ரத்து செய்யப் பட்டு ஆன்லைன் வகுப்புகள் ஆரம்பித்துள்ளன. பிலிப்பைன்ஸ் அரசு தங்கள் நாட்டில் 2024 ஆம் ஆண்டே மிக வெப்பமான ஆண்டாக இருக்கும் என்று கணித்துள்ளது.

குழந்தைகளை வெப்ப பாதிப்பில் இருந்து பாதுகாக்க வீடுகளிலும், பள்ளிகளிலும் அவர்கள் விளையாட நிழல் நிறைந்த குளிர்ச்சியான இடங் களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற யுனிசெப் அறிவுறுத்துகிறது. பெற்றோர்கள் குழந்தைகள் தளர்வான ஆடைகள் அணிவதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளது. குழந்தைகளுக்கு வெப்ப அலை பாதிப் பால் உடல்நலம் குன்றினால் உடனடியாக அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதுமட்டும் போதாது, ஒவ்வொரு குடிமக னும் காலநிலை மாற்றத்தைக் கணக்கில் கொண்டு மரங்கள் வளர்க்க முயற்சிக்க வேண் டும். மற்றவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும். அரசாங்கம் வரும் காலங்களில் அதிக அளவில் மியாவாக்கி அடர்வனங்களை உருவாக்கி பரா




மரிக்க வேண்டும். மரக்கன்று வைத்து வளர்ப் போரை கௌரவித்து ஊக்கப்படுத்த வேண்டும்.

இல்லையெனில், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தத் தவறினால், வரும் 2050 ஆம் ஆண்டுக்குள் உலகின் 200 கோடி குழந்தைகள் அதிக வெப்ப அலை பாதிப்புக்கு உள்ளாவர்கள் என யுனிசெப் ஆய்வானது கணிக்கிறது.



**தமிழ்நாட்டில் கோடை காலத்தில் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபோது எடுத்த படம்.**



# வெப்ப அழுத்தமும் தொழிலாளர் பாதிப்பும்

கோடை காலத்தில் கோடிக்கணக் கான முறைசாரா தொழிலாளர்கள் குறிப்பாக கட்டுமான தொழிலாளர்கள், விவசாய தொழிலாளர்கள், செங்கல் சூளை, சாலையோர வியாபாரிகள், சுவிக்கி, சோமோட்டா ஊழியர்கள், ஓலா — உபர் ஓட்டுநர்கள் மற்றும் இதர சேவைத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் வெப்ப அழுத்தத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். வெப்ப அழுத்தம் என்பது வெப்பநிலையை மட்டுமல்ல, ஈரப்பதம் மற்றும் சூரிய கதிர்வீச்சையும் சார்ந்துள்ளது. இது காயங்கள் மற்றும் வெப்பம் தொடர்பான நோய்களின் அபாயத்தை அதிகரிப்பதன் மூலம் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை ஆபத்தில் ஆழ்த்துகிறது.

### அதிகரிக்கும் வெப்ப அழுத்தம்

1995 இல் வெப்ப அழுத்தத்தின் காரணமாக உலக அளவில் 1.4சதவீதம் வேலை நேரம் இழந்ததால் 2.5 கோடி வேலை இழப்பு ஏற்பட்டது. 2030 இல் 1.3 டிகிரி வெப்பம் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வேலை நேர இழப்பு என்பது 2.2 சதவீதமாகவும் மற்றும் உற்பத்தி இழப்பு காரணமாக 5 கோடி வேலைகள் இழக்கும் அபாயம் ஏற்படும். ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4சதமாக குறையும் நிலை ஏற்படும். 2030 இல் உற்பத்தி இழப்பு 5.3 சதவீதமாக இருக்கும். இதனால் ஏறத்தாழ பல லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். 1995 இல் வெப்ப அழுத்தத்தின் காரணமாக உலக அளவில் 1.4சதவீதம் வேலை நேரம் இழந்ததால் 2.5 கோடி வேலை இழப்பு ஏற்பட்டது. 2030 இல் 1.3 டிகிரி வெப்பம் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வேலை நேர இழப்பு என்பது 2.2 சதவீதமாகவும் மற்றும் உற்பத்தி இழப்பு காரணமாக 5 கோடி வேலைகள் இழக்கும் அபாயம் ஏற்படும். ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4சதமாக குறையும் நிலை ஏற்படும். 2030 இல் உற்பத்தி இழப்பு 5.3 சதவீதமாக இருக்கும். இதனால் ஏறத்தாழ பல லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும்.

### இந்தியாவில் பாதிப்பு

வெப்ப அலை மற்றும் அழுத்தத்தின் காரணமாக தெற்காசியாவில் மூன்றில் ஒரு பங்கு நாடுகள் உண்மையில் 4 சதவீதத்திற்கும் அதிகமான இழப்பைச் சந்தித்துள்ளன.வெப்ப அழுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படும் நாடு இந்தியா ஆகும். இது 1995 இல் 4.3 சதவீத வேலை நேரத்தை இழந்தது. 2030இல் 5.8 சதவீத வேலை நேரத்தை இழக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிக மக்கள் தொகை காரணமாக, இந்தியா பெரும்பான்மையான வேலைகளை இழக்கும் என்று அஞ்சப்படுகிறது. இந்தியாவில் பெரும்பாலான பாதிப்புகள் விவசாயத் துறையில் உணரப்பட்டாலும், கட்டுமானத் துறையில் அதிக வேலை நேரம் இழக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. இந்தியாவில் கிராமப்புறங்களிலிருந்து லட்சக் கணக்கான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் தொழில் செங்கல் மற்றும் கட்டுமானத் தொழிலாகும். இந்த துறையில் குழந்தைகள், சிறார்கள் மற்றும் பெண் தொழிலாளர்கள் அதிகமாக பணி புரிகின்றனர். இவர்களுக்கு குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. அதிக வெப்பநிலை மற்றும் கதிரியக்க வெப்ப அளவுகள் காரணமாக அவர்களின் உடல் நிலை பாதிக்கப்படுவதோடு வாழும் வயதும் குறைகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் செங்கல் தயாரிப்பு, கட்டு மானம் போன்ற அமைப்புசாரா தொழில்களுக்குப் பொருத்தமான இரண்டு சட்டங்கள் உள்ளன, அவை: தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் சேவை விதிமுறைகள்) சட்டம் 1996. இந்தச் சட்டங்கள்முழுமையாக அமலாக்கப்படுவதில்லை இந்த சட்டங்களில் வெப்ப அலை, அதன் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எந்த வித நிவாரணமும் இல்லை.

### சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐஎல்ஓ) பரிந்துரைகள்

இதனால் ஏற்படும் விளைவுகளை சமாளிக்க சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ) பல்வேறு அறிவுரைகள் மற்றும் தீர்மானங்களை இயற்றி உள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு அதன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாட்டில் தனது பரிந்துரை எண் 155 மூலம், வெப்ப அழுத்தமானது தொழிலாளர்களின் வேலை சார்ந்த பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்துக்கு (Occupational Safety &Health) அபாயகரமானது என்று தீர்மானித்துள்ளது. இதனை முழுமையாக தொழிலாளர் அமைப்புகள், முதலாளிகள் மற்றும் அரசாங் கங்கள் கவனத்தில் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடு களை அமலாக்கிட வேண்டும் என்கிறது. மேலும் பரிந்துரை, (எண். 164)குறிப்பிட்டது போன்று தர நிலைகளுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட முதலாளிகள் மற்றும் தொழிலாளர் அமைப்பு களுடன் கலந்தாலோசித்தும், மற்ற அபாயங் கள், வெப்ப அழுத்தத்தை நிவர்த்தி செய்யும் தேசிய வேலை சார்ந்த பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் கொள்கையை உருவாக்க வேண்டும். உதாரணமாக, தொழிலாளர்களை பாது காத்திட குளிர் கூரைகள் மற்றும் குளிர் நடை பாதைகளை நிறுவுதல் ஆகியவை அடங்கும். அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் குளிர்ந்த கூரைகள் கொண்ட வீடுகள், பீனிக்ஸ், அரிசோனாவில் உள்ள முனிசிபல் அதிகாரிகள், “கூல் ரூஃப்ப்ஸ் மாஸ்டர் பிளான்” மற்றும் “மரம் மற்றும் நிழல் மாஸ்டர் பிளான்” ஆகியவற்றைத் தொடங்கிஅமலாக்க முற்பட்டுள்ளனர். இது நகரின் வெப்ப விளைவுகளைத் தணிக்க குளிர் கூரைகளை நிறுவுதல் மற்றும் மரங்களை நடுதல் ஆகியவற்றை பரிந்துரைக்கிறது. மூச்சுக்கு முன்னூறு முறை அமெரிக்கா என்று கூவும் மோடி, அவர்கள் அமைத்திருக்கக்கூடிய பாதுகாப்பு வசதிகளை, இந்தியாவில் செல்வத்தை உருவாக்கும் தொழிலாளர்களுக்கு ஏன் செய்ய மறுக்கிறார்?

“வேலையின் போது ஏற்படும் விபத்துக்கள் மற்றும் உடல்நலத்திற்கு ஏற்படும் காயங் களைத் தடுப்பதற்கு” தேசிய வேலை சார்ந்த பாது காப்பு மற்றும் ஆரோக்கியம் (ளிஷிபி) கொள்கை யை ஏற்றுக்கொள்வதை ஐஎல்ஓ ஒரு கடமை யாக ஆக்குகிறது. பரிந்துரை எண் 164, தேசிய வேலை சார் பாதுகாப்புக் கொள்கையில் “வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் பணியிடத்தில் காற்றின் இயக்கம்” ஆகியவற்றைக் கையாளும் நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. மற்ற சர்வதேச தொழிலாளர் தரநிலைகளும் வெப்ப அழுத்த அபாயங்களை நிர்வகிப்பதற்கான கருவிகளை வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். “சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் ஆரோக்கியத்திற்கு போதுமான பாதுகாப்பை வழங்குவதற்கு”, குறிப்பாக “வெப்பநிலையில் திடீர் மாறுபாடுகள்” மற்றும் “அதிகமான வெப்பம்” ஆகியவற்றைத் தவிர்ப்பதன் மூலம் முதலாளிகள் “அனைத்து பொருத்தமான நடவடிக்கைகளையும்” எடுக்க வேண்டும் என்று பரிந்துரை எண். 97, குறிப்பிடுகிறது. சுகாதாரம் (வணிகம் மற்றும் அலுவலகங்கள்) பரிந்துரை, 1964 (எண். 120), என்பது வெப்ப அழுத்த சூழ்நிலைகளுக்குத் தனிப் பயனாக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அமைக்கும் ஒரு பொதுவான கொள்கையாக, பரிந்துரை எண். 120 இன் 20வது பத்திதெரிவிக்கிறது. பயனுள்ள வேலைசார் பாதுகாப்பு அமைப்புகளை நிறுவுவதற்கு அரசாங்கங்கள், முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் இடையே கூட்டு முயற்சி மற்றும் ஒத்துழைப்பு தேவை என்பதையும் குறிப்பிடுகிறது. வெப்பம் தணிக்கும் பாதைகள் மற்றும் தொழில் சார்ந்த வெப்ப அழுத்தங்கள் — காலநிலை மாற்றம் தணிப்பு என்பது தொழில் சார்ந்த வெப்ப அழுத்தத்தைத் தடுப்பதற்கும் எதிர்கால தொழிலாளர் படையை வெப்பம் தொடர்பான அபாயங்களிலிருந்து பாதுகாப்பதற்கும் முக்கியமாகும்.

### கால நிலை மாற்றம் : சர்வதேச தீர்மானத்தை அமலாக்காத முதலாளித்துவம்

வெப்பத் தணிப்புநடவடிக்கை என்பது உலக நாடுகள் கலந்து கொண்ட கியோட்டோ மாநாட்டிலிருந்து 2024ல் நடைபெற்ற துபாய் மாநாடு வரை புவி வெப்பமயமாதலைத் தவிர்க்க அல்லது குறைக்க மனித குலத்தை பாதுகாத்திட ஏராளமான தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக கார்பன் வாயுவை அகற்றிட (டிகார்பனைசேஷன்), போக்குவரத்தை மின்மயமாக்குதல், நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல், காடழிப்பு மற்றும் காடு வளர்ப்பு மற்றும் கார்பன் பிடிப்பு மற்றும் சேமிப்பு வெளியேற்றத்தை தடுக்கும் தொழில்நுட்பங்களில் அதிக முதலீடு செய்து வெப்பத்தை தணிக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு மற்றும் திரட்சியைக் குறைப்பதன் மூலம், காலநிலை மாற்றத்தை இலகுவாக்க இலக்கும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வளர்ந்த முதலாளித்துவ நாடுகள் நிறைவேற்றவில்லை. இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் ஏற்றுக் கொண்ட இலக்கை நிறைவேற்றி வருகின்றன. அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு என்பதை பற்றி இந்திய அரசு கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. இந்தியாவில் ஏற்கனவே இருந்த வேலை பாதுகாப்பு மற்றும் உடல் நலன் சட்டங்களை தொழிலாளர்களுக்கு விரோதமாக திருத்தி தொகுப்பாக மாற்றப்பட்டது. திருத்தப்பட்ட சட்டத் தொகுப்பிலும் கூட இந்த வெப்ப அலைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை.

வெப்ப அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட தொழில்கள் என்ன என்பதை வரையறுக்க வேண்டும்; குறிப்பாக சேவை துறைகள்.

அரசாங்கங்கள் அதிகபட்ச வெப்பநிலையை நிர்ணயிக்கும் விதிமுறைகளை கடைப் பிடிக்க வேண்டும்.

அதிக வெப்பநிலையிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க குறிப்பிட்ட நடவடிக்கை களை எடுக்க வேண்டும்.

பாதுகாப்பான இடம்பெயர்வை உறுதி செய்ய ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

வெப்ப அழுத்தத்தின் விளைவுகளுக்கு ஏற்ப சமூக காப்பீடு மற்றும் சமூக உதவிவழங்குதல்.

பணியிடங்களில் தொழிலாளர்கள் ஓய்வு எடுக்க சமூக கூடங்கள் மற்றும் பழங்கள் மற்றும் பானங்கள் வழங்க வேண்டும்; நாடு முழுவதும், தொழில்துறை பங்குதாரர்களான தொழிலாளர்கள், முதலாளிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு நிறுவனங்களை கொண்டு சமூக உரையாடல், கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கத்திற் கான வழிவகைகளை செய்ய உறுதி செய்ய வேண்டும். இதற்கான இயக்கங்களை அனைவரும் முன்னெடுக்க வேண்டும்.

---

# தமிழக காவல்துறையின் இணையதளம் முடக்கம்!

## சைபர் கிரைம் போலீஸார் தீவிர விசாரணை!


தமிழக காவல்துறையின் இணையதளம் முடக்கப்பட்டு, பாஸ்வேர்டு திருடப்பட்டிருப்பது குறித்து சைபர் கிரைம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு போலீஸார் குற்றவாளிகளின் தரவு, புகார் குறித்த தரவுகளை சேமித்து வைக்க என ஒவ்வொன்றுக்கும் தனியாக மென்பொருள்களை கையாளுகின்றனர். அந்த வகையில், குற்றவாளிகள், காணாமல் போனவர்கள், சந்தேகத்துக்குரிய நபர்களின் தரவுகள் அனைத்தும், எஃப்ஆர்எஸ் (ஃபேஸ்ரெகக்னிஷன் போர்ட்டல்) எனப்படும் முக அடையாள மென்பொருள் இணையதளத்தில் தமிழக காவல் துறையால் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

இந்த முக அடையாளம் காணும் மென்பொருளானது, ஒரு தனிநபரின் புகைப்படத்தை காவல் நிலையங்களில் சிசிடிஎன்எஸ்—ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தரவுகளோடு ஒப்பிட்டு அடையாளம் காணப் பயன்படுகிறது. மேலும், இதனை எஃப்ஆர்எஸ் செயலியாகவும், போலீஸார் செல்போனில் பயன்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் இந்த இணையதளம், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவியாக உள்ளது.

இந்நிலையில், தமிழக காவல்துறையின் முக அடையாளம் காணும் இந்த இணையதளம் ஹேக்கர்களால் முடக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

எஃப்ஆர்எஸ் மென்பொருள் சிடாக் கொல்கத்தா நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இந்த



மென்பொருள் தமிழகம் முழுவதும் 46,112 பயனர்களால் பயன்படுத்தப்படுகிறது. சமீபத்தில் மார்ச் 13—ம் தேதி தமிழ்நாடு மின்—ஆளுமை முகமையால் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், எஃப்ஆர்எஸ் இணையதளத்தில் விதிமீறல் இருப்பதாக ஒரு முகவரியில் இருந்து தகவல் வந்தது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட முதல்கட்ட விசாரணையில், அட்மின் அக்கவுன்ட்டில் பாஸ்வேர்டு ஹேக்கர்களால் திருடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இந்த அட்மின் அக்கவுன்ட்டில், பயனர்களுக்கான ஐ.டி.யை உருவாக்குதல், எவ்வளவு தேடுதல் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டது உள்ளிட்ட விவரங்களை மட்டுமே பார்க்க முடியும்.

இது சம்பந்தமாக, எல்காட், தமிழ்நாடு மின்—ஆளுமை முகமை, சிடாக் நிறுவனங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி சென்னை சைபர் கிரைம் போலீஸார் விசாரித்து வருகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

# கோடை விடுமுறையில் சிறப்பு வகுப்பு கூடாது

## பள்ளிக் கல்வித்துறை மீண்டும் அறிவுறுத்தல்!




கோடை விடுமுறையில் பள்ளி மாணவர் களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தக் கூடாது என்று பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் மாநிலப் பாடத்திட்டத்தில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு முழு ஆண்டுத் தேர்வுகள் முடிவடைந்து தற்போது கோடை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சில பள்ளிகளில் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவதாக பள்ளிக்கல்வி துறைக்கு புகார்கள் வந்தன.

இதையடுத்து கடும் வெப்பம் நிலவி வருவதால் கோடை விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது என்று கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து பள்ளிக்கல்வி இயக்குநர் க.அறிவொளி மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநர் மு.பழனிசாமி, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

கோடை விடுமுறை அனைத்துபள்ளிகளுக்கும் அறிவித்த பின்னரும், பல பள்ளிகளில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன. கடுமையான வெப்பம் நிலவும் இந்த காலத்தில் கட்டாயமாக சிறப்புவகுப்புகள் நடத்தக் கூடாது.

இது சார்ந்து தங்களின் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும். அதை மீறி சிறப்பு வகுப்புகள் நடத்தும் பள்ளிகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த ஏப்ரல் மாதமும் விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக் கூடாது என்று அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# ராட்சத பனிப்பாறையின் நகர்வு அழிவின் பாதை!

சிங்கப்பூர், பஹ்ரைன் போன்ற 29 நாடுகளைக் காட்டிலும் அதிக பரப்பளவு கொண்ட ராட்சத பனிப்பாறை அன்டார்டிகாவை விட்டு வெளியேறி கடலில் நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்த பாறை நகர்வது ஏன்? இப்போது எங்கே இருக்கிறது? அது நகர்ந்து செல்வதன் விளைவு என்ன?

A23a என அந்த பனிப்பாறை அறியப்படும் 1986இல் அண்டார்டிக்கில் இருந்து பிரிந்தது. அப்போதிருந்து மிகச் சிறிய அளவில் நகர்ந்து கொண்டிருந்த இந்தப் பனிப்பாறை, சமீபத்தில் ஒரு பெரும் இடப்பெயர்வைத் தொடங்கியுள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, நிலையான 'பனித்தீவு' போல வெட்டெல் கடலின் அடிமட்டத்தில் சிக்கியிருந்தது. சுமார் 350 மீட்டர் ஆழமுள்ள அதன் அடிப்பாகம் அதை அந்த இடத்தில் நங்கூரமிட வைத்திருந்தது.

ஆனால், அந்த அடிப்பகுதி 2020ஆம் ஆண்டு வரை சிறிது சிறிதாக உருகியதன் விளைவாக, அந்த பனிப்பாறை மீண்டும் கடல்நீரில் மெல்ல மிதக்கத் தொடங்கியது. பின்னர் காற்றோட்டம், காற்று ஆகியவை அந்தப் பனிப்பாறையை வெப்பமான காற்று மற்றும் நீர் இருக்கும் வடக்கு நோக்கி நகர வைத்தது. இப்போது அண்டார்டிகாவின் மிதக்கும் பனியில் பெருமளவைச் சுமந்து செல்லும் கி23ணீ தற்போது அந்தப் பாதையைப் பின்பற்றிப் பயணித்து வருகிறது.

இது அழிவின் பாதை. இன்னும் சில மாதங்களில் இந்தப் பெரும் பனிப்பாறை துண்டு துண்டாக உடைந்து உருகப் போகிறது.

**ஈஃபிள் டவர் உயரத்தைவிட அதிக சுற்றளவு**

இன்று, அண்டார்டிக் முனையிலிருந்து வடகிழக்கே சுமார் 700கி.மீ தொலைவில் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு அருகிலுள்ள 60வது பேரலல் என்ற பகுதியை ஒட்டிய பாதையில் நகர்ந்து செல்கிறது.

அது சிறிது சிறிதாக சிதைவதற்கான செயல்முறை ஏற்கெனவே தொடங்கிவிட்டதை, செயற்கைக்கோள் படங்களும் அதை நெருக்கமாகக் கண்காணிக்கும் கப்பல்களில் இருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அதிலிருந்து தினமும் பெரியளவிலான பனித் துண்டுகள் கடலில் விழுகின்றன.

இப்போதே அப்படி உடைந்து விழுந்த கால்பந்து அளவிலான மற்றும் லாரி அளவிலான பனிக்கட்டிகள் A23a—ஐ சூழ்ந்துள்ளன.

காற்று, கடல் நீரோட்டம், சுழல் ஆகியவை வரவிருக்கும் வாரங்களில் A23a பனிப்பாறையின் போக்கைத் துல்லியமாகத் தீர்மானிக்கும். ஆனால், அதைச் சூழ்ந்திருக்கும் ராட்சத பனிப்பாறைகள், அது தற்போது இருக்கும் இடத்திலிருந்து தோராயமாக, 650 கி.மீ தொலைவில் வடகிழக்கே தெற்கு ஜார்ஜியாவை கடக்கும் போதே உருகிவிடும். பிரிட்டிஷ் ஓவர்சீஸ் டெரிட்டரி என்ற பகுதி நிறைய பனிப்பாறைகள் இருக்கும் இடமாகத் தெரிகிறது.

A23aஇன் அளவை முழுமையாகப் புரிந்துகொள்வது மிகவும் கடினம். ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் கிரையோசாட்—2 (துருவப் பனிக்கட்டிகளின் அடர்த்தி மற்றும் அவற்றில் நிகழும் மாற்றங்களைக் கண்காணிப்பதற்கான ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் திட்டம்) திட்டத்தில் பணியாற்றும் விஞ்ஞானிகள் இந்தப் பெரும் பனிப்பாறையின் சுற்றளவை மதிப்பிடுவதற்கு விண்கலத்தில் ரேடார் அல்டிமீட்டரை பயன்படுத்தினர்.

அப்போது அதன் சுற்றளவு சராசரியாக 280 மீட்டர் தடிமன் இருப்பதைக் கண்டறிந்தனர். ஒப்பீட்டளவில் பார்த்தால், இது பிரான்சில் உள்ள ஈஃபில் டவரின் (330 மீட்டர்) உயரத்தைவிட இதன் சுற்றளவு அதிகம்.

**பிரமிக்க வைக்கும் ராட்சத அளவு**

இந்த பிரமாண்ட பனிப்பாறையின் 30மீ உயரமான குன்றின் செங்குத்தான பகுதிக்கு அருகே பயணம் செய்தாலும்கூட அதன் மொத்த அளவைப் புரிந்துகொள்வது மிகக் கடினம். அப்படிச் செய்வது பக்கிங்ஹாம் அரண்மனையின் முகப்பில் நின்று லண்டனின் மொத்த பரப்பளவை அளவிடுவதைப் போல் இருக்கும்.

அதன் அளவு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தாலும், லக்சம்பர்க், பஹ்ரைன், சிங்கப்பூர் உட்பட இவற்றைப் போன்ற சுமார் 29 நாடுகளின் அளவைவிட அது மிகப் பெரியது.

ஆற்றல் மிக்க அலைகள் பெரும் மலையாகத் திகழும் இந்த பனிப்பாறையின் சுவர்களில் மோதுகின்றன. அதன் மகத்தான குகைகள் மற்றும் வளைவுகளைச் செதுக்குகின்றன.

அந்தப் பனிப்பாறையில் நீரில் மூழ்கியிருக்கும் பகுதியான பரந்த சம தளத்தை, பாறையை அரிப்பதன் மூலம் மேற்புறத்திற்கு அழுத்துகின்றன. இதன் விளைவாக பனிப்பாறையின் அந்தப் பகுதிகள் இடிந்து கடலில் விழுகின்றன.

இந்தச் செயல்முறையில், கடலில் மிதந்து செல்லும் பனிப்பாறையின் சமதளம் மேற்பரப்புக்கு அலைகளால் வலிய மேற்பரப்புக்கு வரவைக்கப்படுகின்றன. இந்தச் செயல்பாட்டில் பாறையின் மேற்பரப்பு விளிம்புகள் உடைந்து விழுகின்றன. இது மட்டுமின்றி வெப்பமான காற்றும் அதன் பங்குக்கு பனிப்பாறையைப் பாதிக்கின்றது.

**உருகும் பனியால் விழும் விரிசல்கள் ஏற்படுத்தும் அபாயம்**

காற்றிலுள்ள வெப்பத்தின் காரணமாக பனி உருகுதலால் உருவாகும் நீர், பாறையின் மேற்பரப்பில் சேகரிக்கப்பட்டு, விரிசல்களில் வடிந்து அந்தப் பிளவுகளை இன்னும் ஆழமாகக் கீழே வரை கொண்டு செல்கிறது. இதனாலும் பாறையில் உடைப்பு ஏற்படுகிறது.

இந்த ஆண்டின் பிற்பகுதியில், இந்தப் பேரழிவுக்கான பாதையில் A23aஇல் எஞ்சியிருப்பது வேறு எதுவுமே இல்லை என்ற நிலை வரலாம். A23a பனிப்பாறை, அனைத்து பெரிய பாறைகளையும் போலவே, அது உருகும்போது அந்தப் பனியில் சிக்கியிருக்கும் கனிம தூசுகளைச் சிதறடிக்கும்.

கடல்பரப்பில், இந்தத் தூசு கடல் உணவுச் சங்கிலிக்கான அடித்தளத்தை உருவாக்கும் உயிரினங்களுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துகளின் ஆதாரமாக உள்ளது. பிளாங்டன் முதல் பெரிய திமிங்கிலங்கள் வரை, அனைத்தும் இந்தப் பெரும் பனிப்பாறையின் அழிவிலிருந்து பயனடையும்.

இந்தப் பெரும் பனிப்பாறை குறித்து மக்கள் கேட்கும்போதெல்லாம், இதற்குக் காரணம் காலநிலை மாற்றமாகத்தான் இருக்க வேண்டும், இது வெப்பமயமாதலின் விளைவு என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மை மிகவும் சிக்கலானது.

A23a அண்டார்டிகாவின் ஒரு பகுதியிலிருந்து வந்தது. அங்கு நிலைமை இன்னும் குளிராக உள்ளது. அந்த தோற்றப்புள்ளியான, ஃபில்ஷ்னர் பனிப்படலம், பனிப்பாறைகளால் உருவாக்கப்பட்ட மிதக்கும் பனிக்கட்டி ஆகும். அவை அந்த கண்டத்திலிருந்த வெட்டல் கடலுக்குள் பாய்ந்தன. அங்கு நீருக்குள் நுழையும்போது பனிப்பாறைகளின் மிதக்கும் பரப்பு மேலே உயர்ந்து ஒன்றாக இணைகின்றன.

இந்தப் பனிப்படலத்தின் முன் விளிம்பில் பெரிய அளவிலான பனிக்கட்டிகள் உதிர்வது ஓர் இயற்கையான செயல்முறை. விஞ்ஞானிகள் இதை "கன்று ஈன்ற" எனக் குறிப்பிடுகிறார்கள். அதாவது ஒரு பசு தனது குட்டிகளைப் பெற்றெடுப்பதைப் போல, பனிப்பாறை பனிக்கட்டிகளை உதிர்க்கிறது.

பனிப்பொழிவு மற்றும் பனிப்பாறையைப் பின்னால் இருந்து உருவாக்கும் பனிக்கட்டிகளின் வெளியேற்றம் சமநிலையில் இருந்தால் பனிப்படலம் சமநிலையில் இருக்கும். பனிப்படலத்தின் முன்புறம் வெதுவெதுப்பான நீரால் தாக்கப்பட்டால், அது சமநிலையை இழக்கக்கூடும். ஆனால், இது ஃபில்ஷ்னரில் நடப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

**கடந்த காலத்தைப் பற்றிய புரிதல்**

எப்படியிருப்பினும், கண்டத்தின் பிற பகுதிகளில் வெப்பமான நிலைமைகள் முழு பனிப்படலத்தின் சரிவைத் தூண்டுவதையும், பெருங்கடல்களின் மட்டத்தை உயர்த்துவதையும் நாம் கண்டுள்ளோம் என்பது வியக்கத்தக்க வகையில் உண்மை.

மேலும், இத்தகைய பனி ராட்சதர்கள் எங்கு, எவ்வளவு அதிகமாக கன்று ஈன்றார்கள் (பனிப்பாறைகளை வெளியேற்றின) என்பதை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து, சமநிலை மாறுகிறதா என்பதற்கான ஏதேனுமொரு மாற்றத்தைக் கண்டறிய முயல்கின்றனர்.

அவர்கள் ஆழமான வரலாற்று சூழலையும் புரிந்துகொள்ள முயல்கிறார்கள். செயற்கைக் கோள்கள் சுமார் 50 ஆண்டுக்கால அவதானிப்புகளை மட்டுமே அளித்துள்ளன. இதுவொரு ஒரு சிறிய பதிவு மட்டுமே.

நீண்ட முன்னோக்கைப் பெற, ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் பனிப்பாறை ஆலியில் உள்ள கடல் தளத்தில் துளையிட்டனர். அவர்களால் அந்த மண் பகுதியின் கால அளவைக் கணக்கிட்டு, அதில் இருந்த டெட்ரிடஸ் எனப்படும் பனிப்பாறைகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கடலில் கொட்டப்பட்ட கற்களை ஆய்வு செய்ய முடிந்தது.

இந்த ஆய்வு கடந்த கால நிகழ்வுகளைப் பற்றிய புரிதலை உருவாக்கியது. எடுத்துக்காட்டாக, அந்தப் பகுதி சுமார் 12 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பனிப்பாறைகளின் பெரும் பாய்ச்சலைக் கண்டதாக ஆய்வு முடிவுகள் பரிந்துரைத்தன.

மேற்கு அண்டார்டிகாவின் பல பனிப்படலங்களை உடைத்த, முன்பு நிகழ்ந்த அங்கீகரிக்கப்படாத வெப்பமயமாதல் கட்டத்தின் ஆதாரமாக இது இருந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பூமியில் பனிப்பாறைகளின் கடந்த காலச் செயல்பாடுகளை நேரடியாக நிகழ் காலத்தில் தொட்டுணரக்கூடிய பகுதிகள் உள்ளன. உதாரணமாக, தென்னாப்பிரிக்காவில், 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, அந்த நிலப்பகுதி நீருக்கு அடியில், தென் துருவத்திற்கு மிக நெருக்கமாக இருந்த போது, அவை கடல்தரையில் இழுத்துச் செல்லப்பட்டபோது, பனிக்கட்டிகள் விட்டுச் சென்ற தடயங்களின் மீது இன்று நம்மால் நடக்க முடியும்.

அதோடு, வெட்டெல் கடலின் அடிப்பகுதியில், A23a இதேபோன்ற விஷயங்கள் இருக்கும். இவையும் ஆயிரக்கணக்கில், ஒருவேளை லட்சக் கணக்கான ஆண்டுகள் நீடித்திருக்க வாய்ப்புள்ளது.

இறுதியாக "A23a என்றொரு பனிப்பாறை இருந்தது" எனச் சொல்வதற்கான அடையாளமாக அது இருக்கக்கூடும்.

# தாகம் தீர்க்க வீடுகள் முன்பு குடிநீர் வையுங்கள்

## மதுரையில் ஒலிபெருக்கி மூலம் முதியவர் விழிப்புணர்வு!



மதுரை நகர்ப்பகுதியில் ஒலி பெருக்கி மூலம் முதியவர் ஒருவர், மக்கள் குடிப்ப தற்காக சாலையோரங்களில் வசிப்போர் தங்கள் வீட்டின் முன் பாத்திரங்களில் குடிநீர் வைக்கவும், பகல் நேரத்தில் வீட்டை விட்டு முதியோர், குழந்தைகளை வெளியே அனுப்ப வேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு உரக் கச் சொல்லி விழிப்புணர்வு செய்து வருகிறார்.

மதுரை பேச்சியம்மன் படித்துறை கீழ அண்ணா தோப்பு தெருவைச் சேர்ந்த இல. அமுதன் ( 67 ) என்பவர், தினமும் தானியங்கி ஒலிபெருக்கியை கொண்டு நகர வீதிகளில் கோடை காலத்தில் தமிழக அரசு கடைபிடிக்க கூறியுள்ள அறிவுரைகளை எடுத்துச் சொல்லி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகி றார். காலை, மாலை நேரங்களில் அவர் வசிக் கும் இருப்பிடங்கள் மட்டுமல்லாது, மக்கள் அதிகமாக வந்து செல்லும் மீனாட்சி அம்மன் கோயில் வீதிகள், பெரியார் பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் ஒலி பெருக்கியில் இந்த விழிப்புணர்வை தொடர்ந்து செய்து வருகிறார்.

தற்போது வெயிலின் உக்கிரம் அதிகமாக இருப்பதால் பகல் பொழுதில் முதியவர்கள், குழந்தைகள், பெண்கள் வெளியே வரவேண் டாம் என்றும், வீடுகள் முன் மக்கள் குடிப்பதற்கு குடிநீர் வைக்கவும் ஒலி பெருக்கி மூலம் அறிவுறுத்தி வருகிறார்.

இது குறித்து அமுதன் கூறியதாவது: சமீப காலத்தில் இந்த ஆண்டுதான் மதுரையில் கடும் வறட்சி நிலவுகிறது. குடிநீர் பற்றாக் குறையும் உள்ளது. கோடை வெயிலில் பொது இடங்களில் குடிக்க தண்ணீர் இல்லாமல் முதியவர்கள், சுமையுடன் மிதி வண்டிகளை ஓட்டுவோர், தலைச் சுமை வியாபாரிகள் மயங்கி விழுவதை பார்த்திருக்கிறேன். வெளி இடங்களுக்கு வரும் வசதியானவர்கள் பாட் டில் தண்ணீரை வாங்கியும், இளநீர், குளிர் பானங்களை பருகியும் இந்த கோடை வெயி லின் வெப்பத்தை சமாளித்து விடுவார்கள்.

ஆனால் அடித்தட்டு மக்கள் தண்ணீர் கொண்டு வராமல், செல்லும் இடங்களில் குடித்து விடலாம் என வந்து விடுகிறார்கள். எனவே அவர்கள் பயன்பெறும் வகையில் சாலையோரமாக வசிப்பவர்கள் தங்கள் வீட்டின் வாசல்களில் சிறிய பாத்திரத்தில் தண்ணீர் வைக்கும்படி கேட்டு வருகிறேன். அதுபோல் வியாபாரிகள், தங்கள் கடைகளின் முன்பு குடிநீர் பானைகள் வைக்கவும் விழிப் புணர்வு செய்கிறேன். நான் சொல்வதைக் கேட்கும் 100 பேரில் 50 பேர் அதை பின் பற்றினாலே கோடை வெயிலில் வெளியே வருவோர் பயனடைவர் என்றார்.

# தாயின் பாதம் தொட்டு வணங்கி ஆசி பெற்ற இந்திய கடற்படையின் 26-வது தளபதி அட்மிரல் தினேஷ்குமார்!



கடற்படை புதிய தளபதியாக அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி பொறுப்பேற்றார். அதற்கு முன் அவர் தனது தாயின் பாதம் தொட்டு வணங்கி ஆசி பெற்றார்.

கடற்படை தளபதியாக இருந்த அட்மிரல் ஹரி குமார் ஓய்வு பெற்றார். இதனால் கடற்படையின் துணை தளபதியாக இருந்த வைஸ் அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி, புதிய தளபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

அவர் டெல்லி சவுத் பிளாக்கில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படையின் 26—வது தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். இந் நிகழ்ச்சியில் அவரது தாயார் ரஜினி திரிபாதி உட்பட அவரது குடும்பத்தினர் கலந்து கொண் டார். பதவி ஏற்கும் முன்பாக அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி, தனது தாயின் பாதம் தொட்டு ஆசி பெற்றார்.

அட்மிரல் தினேஷ் குமார் கடந்தகடந்த 1985—ம் ஆண்டு கடற்படையில் சேர்ந்தார். கடற்படையின் மேற்கு மண்டல தலைமை அதிகாரியாகவும், இந்திய போர்க் கப்பல்கள் வினாஷ், கிர்ச், திரிசூல் ஆகியவற்றின் தலைமை அதிகாரியாகவும் அட்மிரல் தினேஷ் குமார் பணியாற்றியுள்ளார்.

வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சி கல்லூரி, அமெரிக்காவில் உள்ள கடற்படை கல்லூரி ஆகியவற்றிலும் இவர் பயிற்சி பெற்றுள்ளார். கடற்படையில் இவர் ஆற்றிய சேவைக்காக அதி விஷிஸ்ட் சேவா பதக்கம், நவ் சேனா பதக்கம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

புதிய தளபதியாக பொறுப்பேற்றபின் தினேஷ் குமார் திரிபாதி அளித்த பேட்டி: நமது கடற்படை இத்தனை ஆண்டுகளாக போருக்கு தயார்நிலையிலும், நம்பகத்தன்மை யுடனும், எதிர்கால சவால்களை எதிர்கொள் ளும் வகையிலும் சேவையாற்றியுள்ளது. கடல்சார் துறையில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு எப்போதும் இந்திய கடற் படை போருக்கு தயார் நிலையில் இருக்கும்.

இதில் மட்டுமே எனது கவனம் இருக் கும். புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப் படுத்துவதற்கும், வளர்ந்த இந்தியாவாக மாறுவதற்கும், கடற்படையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் தற்சார்பு இந்தியா நடவடிக்கைகளைநான் வலுப்படுத்துவேன். இவ்வாறு திரிபாதி கூறினார்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

# சதுப்பு நிலங்களை அடையாளம் காணும் பணியை ஜுனில் தொடங்க ஐகோர்ட் உத்தரவு



தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சதுப்பு நிலங்களை அடையாளம் காணும் பணியை ஜுன் மாதம் முதல் தொடங்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள சதுப்பு நிலங்களை பாதுகாப்பது தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்றம், 2018—ம் ஆண்டு தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விசாரித்து வருகிறது. இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்கா புர்வாலா மற்றும் நீதிபதி சத்திய நாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில், முன்னோடி திட்டமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சதுப்பு நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஜுன் மாதம் முதல் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சதுப்பு நிலங்களை அடையாளம் காணும் பணியை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். மேலும், அந்த சதுப்பு நிலங் களை நேரில் ஆய்வு செய்ய வேண்டும் .

மாவட்டங்களில் உள்ள சதுப்பு நிலங் களை அடையாளம் காணும் பணி குறித்து அவ்வப்போது உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இப் பணிகளுக்கு நிபுணர்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ள அரசுக்கு அனுமதி யளித்து, வழக்கின் விசாரணையை ஜுலை முதல் வாரத்துக்கு தள்ளி வைத்து உத்தர விட்டனர்.



# ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருந்து மீண்டு பதிப்பகம் தொடங்கிய ரவிச்சந்திரன்!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டு சிறைவாசத் துக்கு பின் விடுதலையான ரவிச்சந்திரன் புதிய பதிப்பகத்தை தொடங்கியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் விருதுநகர் மாவட்டம் அருப்புகோட்டையைச் சேர்ந்த ரா.பெ.ரவிச்சந்திரனும் ஒருவர். இந்த வழக்கில் இவருக்கு முதலில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. மேல் முறையீட்டில் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. சுமார் 32 ஆண்டு சிறை வாசத்துக்கு பின் 2022 நவம்பர் மாதம் விடுதலையானர்.

சிறையில் இருக்கும் போது சிறையில் செய்த வேலைக்காக தனக்கு அளிக்கப்பட்ட ஊதியத்தை ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை தொடங்கவும், பேரிடர் நிவா ரண நிதிக்கும் வழங்கியுள்ளார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வந்த ஏழு பேரை விடுதலை செய்யக்கோரும் தமிழக அரசின் அமைச்சரவை தீர்மானத்தை செயல்படுத்தக் கோரி சிறையிலிருந்தபடி வழக்கு தொடர்ந்தார்.

சிறையிலிருந்து விடுதலையான ரவிச்சந்திரன் 'காரா' பதிப்பகம் என்ற பெயரில் புதிய பதிப்பகத்தை மதுரை ஒத்தக்கடை ராஜகம்பீரத்தில் தொடங்கியுள்ளார். இங்கு ரவிச்சந்திரன் எழுதிய புத்தகங்களும், காரா பதிப்பகம் வெளியிட்ட புத்தகங்களும் உள்ளன. ரவிச்சந்திரன் கூறுகையில், 'சிறையிலிருந்துபோது வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொண்டேன். சிறையிலிருந்த நாட்களில் 10 புத்தகங்கள் எழுதும் அளவுக்கு தகவல்கள் கிடைத்தன. முக்கிய கொலை வழக்கில் சிறையில் இருந்ததால் எனது புத்தகத்தை வெளியிட யாரும் முன்வரவில்லை. அந்த நேரத்தில் ஏக லைவன் என் புத்தகத்தை துணிச்சலாக வெளியிட்டார். அவரது தூண்டுதல் தான் நான் சொந்த பதிப்பகம் தொடங்க காரணமாக இருந்தது.

சிறையிலிருந்து வெளியே வந்ததும் மக்களிடையே வாசிப்பு பழக்கம் குறைவாக இருப்பதை தெரிந்து கொண்டேன். குரலற்றவர் களின் குரலாக இருக்க வேண்டும். இதனால் லாப, நஷ்ட கணக்கு பார்க்காமல் சமூகத் துக்கு பயனாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிறையிலிருந்து மீண்டு வந்த பிறகு காரா பதிப்பகம் தொடங்கினேன்.

ராஜீவ் கொலை வழக்கு டாப் சீக்ரெட் டின் 4வது பதிப்பு, சிறை மொழி உட்பட 4 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அடுத்த சம கால உலக அரசியலை சொல்லும் நாடக வடிவிலான புத்தகம் வெளிவரவுள்ளது. புத்தகம் எழுதுவதும், வெளியிடுவதும் தொடரும்" என்றார்.

# 2023-ல் மதுரை கிளையில் 75 ஆயிரம் வழக்குகளுக்கு தீர்வு-நீதிபதி பெருமிதம்!




உயர் நீதிமன்ற மதுரை கிளை அனைத்து வழக்கறிஞர்கள் சங்கம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கங்கபுர் வாலாவுக்கு பிரிவு உபச்சார விழா நடத்தப்பட்டது. இதில் தலைமை நீதிபதிக்கு வழக்க றிஞர்கள் சங்கம் சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

பின்னர் தலைமை நீதிபதி பேசியது: "பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு மதுரையில் உயர் நீதிமன்ற கிளை 2004—ல் தொடங்கப்பட்டது. மதுரையில் உயர் நீதிமன்ற கிளை தொடங்கப் பட்டதன் நோக் கம் நிறைவேறியுள்ளதா? மதுரை கிளையில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் வழக்காடி களின் நம்பிக்கையை பெற்றுள்ளனரா என்ற கேள் விகள் எழுகின்றன. இந்த கேள்விகளுக்கு பதில் 'ஆம்' என்பதே. மதுரை கிளையில் அதிக வழக்கு கள் தாக்கலாகி வருகின்றன.

வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளனர். இந்த நம்பிக்கை காரணமாக மதுரை கிளை யில் தாக்கலாகும் வழக்குகளின் எண் ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 2023—ல் 71 ஆயிரம் வழக்கு கள் தாக்கலானது. அந்த ஆண்டில் 75 ஆயிரம் வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளது. உயர் நீதி மன்ற அமர்வு மதுரையில் அமையாவிட்டால் இங்கு தாக்கலாகும் 50 சதவீத வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கலா கும். இதனால் தென் மாவட்ட வழக்காடி களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும். சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களை ஒப்பிடுகையில் மதுரைக் கிளை இளம் வழக்கறிஞர்கள் இன்னும் கடினமாக உழைக்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து வழக்க றிஞர்கள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதி, உயர் நீதிமன்ற நீதிபதிகளாகியுள்ளனர். மதுரைக் கிளையின் பங்களிப்பது அந்த அளவுக்கு இல்லை. இதனால் மதுரைக் கிளையின் இளம் வழக்கறிஞர்கள் இன்னும் கடுமையாக உழைத்து நீதித்துறையில் உயர் நிலையை அடைய வேண்டும். இதை மதுரை கிளை வழக்கறிஞர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகிறேன்" என்று அவர் பேசினார்.

நிர்வாக நீதிபதி சுரேஷ்குமார், மகா சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன், எம்பிஏஏ சங்கத் தலைவர் எம்.கே.சுரேஷ், எம்பிஎச் ஏஏ சங்கத் தலைவர் ஆண்டிராஜ், பெண் வழக் கறிஞர் சங்கத் தலைவர் ஆனந்தவள்ளி, எம்எம் பிஏ சங்கத் தலைவர் அழகுராம் ஜோதி, சங்கச் செயலாளர்கள் கார்த்தி, வெங்கடேசன், அன்பரசு, கிருஷ்ண வேணி, ஆயிரம் கே.செல்வகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வழக்கறிஞர்கள் மனசாட்சிப்படி நேர்மையாக செயல்பட வேண்டும்-உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அறிவுரை!

வழக்கறிஞர்கள் மனசாட்சிப்படி நேர்மையுடன் செயல்பட வேண்டும் என உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சஞ்சய் வி.கங்கா புர்வாலா தெரிவித்தார்.

சிவகங்கை ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ரூ.9.82 கோடியில் கட்டப்பட்ட கூடுதல் நீதிமன்றக் கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றது. கட்டிடத்தைத் திறந்து வைத்து உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சஞ்சய் வி.கங்கா புர்வாலா பேசியதாவது: வேலுநாச்சியார் தனிநபராக ஆங்கிலேயர் களை எதிர்த்துப் போரிட்டார். நாட்டின் சுதந் திரப் போராட்டத்தில் சிவ கங்கை மாவட்ட மக்கள் தங்களது தியாகத்தை அளித்துள்ளனர்.

17—ம் நூற்றாண்டில் மருது சகோதரர்கள் காலத்திலேயே நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. பழமையான பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலுக்கு பல்வேறு மாநிலங்கள், நாடுகளில் இருந்து வருகின்றனர். கீழடி அகழ் வைப்பகம் மூலம் வரலாற்றை நேரடியாக அறிந்து கொள்ள முடிகிறது. பொதுமக்களுக்குச் சமநிலையான, உண்மையான தீர்ப்புகளை நீதிமன்றங்கள் அளிக்க வேண்டும். நீதிமன்றங் களை நாடி வரும் மக்களுக்கு காலதாமத மின்றி தீர்ப்பு வழங்க வேண்டும். இதற்கு வழக்கறிஞர்கள், நீதிபதிகள் என அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

வழக்கறிஞர் வழக்கில் தோற்றாலும் தனது கட்சிக்காரரை இழக்கக் கூடாது. கட்சிக்கா ரரை இழந்தாலும் நீதியை இழக்கக் கூடாது. நீதி கிடைக்கா விட்டாலும் நேர்மை, மன சாட்சியை இழக்கக் கூடாது. புதிதாகத் திறக் கப்பட்ட நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு வந்துள்ளது என்பதை பிற் காலத்திலும் பேசும் வகையில் வழக்கறிஞர்கள், நீதிபதிகள் செயல்பட வேண்டும். இங்கு நடைபெறும் முதல் வழக்கை அடிக்கடி ஒத்திவைக்காமல் தாமதமின்றி சிறந்த தீர்ப்பை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினர்.

முன்னதாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.சுரேஷ் குமார், பி.டி.ஆதிகேசவலு, பி.வடமலை, சி.குமரப்பன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். மாவட்ட நீதிபதி குரு மூர்த்தி வரவேற்றார். உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஜானகிராமன் செங்கோல் வழங்கினார். பொதுப்பணித் துறை முதன்மைப் பொறியாளர் ரகுநாதன், வழக்கறிஞர் சங்கச் செயலாளர் சித்திரைச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தலைமைக் குற்றவியல் நீதிபதி சுந்தர ராஜ் நன்றி கூறினார்.

# ஜிஎஸ்டி வசூல் முதல் முறையாக ரூ.2 லட்சம் கோடியைத் தாண்டியது!

ஜிஎஸ்டி வசூல் புதிய உச்சம் தொட்டுள்ளது. இதுவரை இல்லாத அளவில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ரூ.2.10 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகியுள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வலுவான உள்நாட்டுப் பரிவர்த்தனை மற்றும் இறக்குமதி காரணமாக ஜிஎஸ்டி வசூல் உயர்ந்திருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.1.87 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. இந்நிலையில், இவ்வாண்டு ஏப்ரலில் 12.4 சதவீதம் உயர்ந்து ரூ.2.10 லட்சம் கோடி வசூலாகியுள்ளது.




மத்திய ஜிஎஸ்டி ரூ.43,846 கோடி, மாநில ஜிஎஸ்டி ரூ.53,538 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.99,623 கோடியாக உள்ளது. செஸ் வசூல் ரூ.13,260 கோடியாக உள்ளது.

ரீஃபண்ட் வழங்கப்பட்ட பிறகான நிகர ஜிஎஸ்டி வசூல் ரூ.1.92 லட்சம் கோடியாக உள்ளது. சென்ற ஆண்டு ஏப்ரலுடன் ஒப்பிடுகையில் இது 15.5 சதவீதம் அதிகம் ஆகும்.

ஜிஎஸ்டி வசூல் உயர்ந்திருப்பது உள் நாட்டு தொழில் மேம்பட்டு இருப்பதைக் காட் டுவதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மாதத்தில் உள்நாட்டு பரிவர்த்தனை 13.4 சதவீதமும் இறக்குமதி 8.3 சதவீதமும் அதி கரித்துள்ளதாக மத்திய அரசு குறிப்பிட்டுள் ளது.

நாடு முழுவதும் ஒரே வரி முறையைக் கொண்டு வரும் நோக்கில் மத்திய அரசு 2017—ம் ஆண்டு ஜுலை மாதம் ஜிஎஸ்டியை நடைமுறைப்படுத்தியது. இந்நிலையில், தற்போது முதன்முறையாக ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. 2017 ஜுலை முதல் 2024 ஏப்ரல் வரையில் ஜிஎஸ்டி வசூல் ஆண்டுக்கு சராசரியாக 13 சதவீதம் அதிகரித்துள்ளது,

2023—24 நிதி ஆண்டில் மொத்த ஜிஎஸ்டி வசூல் ரூ.20.18 லட்சம் கோடியாக உள்ளது. 2022—23 நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.7 சதவீதம் அதிகம் ஆகும்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

# தமிழ்நாட்டில் தேர்தலைப் புறக்கணித்த கிராமங்கள் - காரணம் என்ன?

இந்தியாவில் 18வது மக்களவைத் தேர்தலின் முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள 39 மக்களவைத் தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் உள்ள 1 தொகுதிக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

அதேநேரம், தமிழ்நாட்டில் உள்ள சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தேர்தலை புறக்கணித்துள்ளனர். யார் இந்த மக்கள்? அவர்கள் தேர்தலைப் புறக்கணிக்க காரணம் என்ன? இந்தத் தொகுப்பில் காணலாம்.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்துள்ள மக்களவைத் தேர்தலை பல்வேறு காரணங்களுக்காக 10 கிராமங்கள் புறக்கணித்துள்ளனர். ஆனால், ஒரு சில கிராமங்கள் அதிகாரிகளின் பேச்சு வார்த்தைக்குப் பிறகு கடைசி நேரத்தில் தங்களது வாக்குகளைச் செலுத்தியுள்ளனர்.

**வேங்கைவயல், புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மலம் கலந்த குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படாததைக் கண்டித்து அந்தக் கிராம மக்கள் மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.



கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி ஒரு பிரிவினர் பயன்படுத்தும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த விவகாரத்தில் ஓராண்டுக்கு மேலாகியும் இது வரை சிபிசிஐடி போலீசாரால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வரை தாங்கள் தேர்தலில் பங்கேற்கப் போவதில்லை என்று அந்த கிராம மக்கள் கூறியுள்ளனர். இதனால் மாவட்ட அதிகாரிகள் அந்த மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து வாக்குப்பதிவு முடியும் இறுதி நேரத்தில் வேங்கைவயலைச் சேர்ந்த மக்கள் பலரும் தங்களது வாக்குகளைச் செலுத்தியுள்ளனர்.

**பரந்தூர் கிராமம், காஞ்சிபுரம்**

சென்னை விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகள் என்ற பெயரில் காஞ்சிபுரம் பரந்தூரில் உள்ள விவசாய நிலங்களைக் கையகப்படுத்தப் போவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதை எதிர்த்து 600 நாட்களுக்கும் மேலாக பரந்தூர் கிராம மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தற்போதைய மக்களவைத் தேர்தலையும் புறக்கணித்துள்ளனர்.



இந்த கிராமத்தில் மொத்தமாக 1,375 வாக்குகள் உள்ளன. இவர்கள் யாரும் வாக்களிக்கச் செல்லாத நிலையில், அவர்களை வாக்களிக்க வலியுறுத்தி வருவாய்த் துறையினர் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

ஆனால் கிராம மக்கள் யாரும் வாக்களிக்கப் போவதில்லை என்று அம்மக்கள் கூறினர். இங்கு வசிக்கும் ஒரு சில அரசு ஊழியர்களைத் தவிர வேறு யாரும் வாக்களிக்கப் போவதில்லை என்றும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

**திருமங்கலம் தொகுதியில் 5 கிராமங்கள்**

விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் 5 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அப்பகுதியில் செயல்பட்டு வரும் கெமிக்கல் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கள்ளிக்குடி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கோழிக் கழிவு மூலம் உற்பத்தி செய்யப்படும் கெமிக்கல் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னம்பட்டி, ஓடைப்பட்டி, மேலப்பட்டி, பேய்குளம், ஆவல் சூரன்பட்டி ஆகிய கிராம மக்கள் மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலையில் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் இந்த மக்களோடு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதில் மூன்று கிராமங்களில் மட்டும் குறைந்தளவில் வாக்குப்பதிவு நடந்துள்ளது.

**மேலப்பட்டி: மொத்த வாக்குகள் – 514, பதிவான வாக்குகள் – 145**

**ஓடைப்பட்டி: மொத்த வாக்குகள் – 634, பதிவான வாக்குகள் – 10**

**ஆவல் சூரன் பட்டி: மொத்த வாக்குகள் – 1681, பதிவான வாக்குகள் – 12**

ஐந்து கிராமங்களிலும் சேர்த்து மொத்த வாக்குகள்: 5050, பதிவான வாக்குகள்: 167

**ஜோதிஅள்ளி கிராமம், தருமபுரி**

தருமபுரி மாவட்டம் ஜோதிஅள்ளி கிராமத்தில் ரயில்வே தரைப்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்காததால் ஒட்டுமொத்த கிராம மக்களும் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.

தருமபுரி நாடாளுமன்றத் தொகுதிக்கும், பாலக்கோடு சட்டமன்ற தொகுதிக்கும் இடைப்பட்ட ஜோதிஅள்ளி கிராமத்தில் நீண்ட நாட்களாகவே ரயில்வே தரைபாலம் அமைக்க வேண்டி அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து இது வரை எந்த அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்த வராததால் ஒட்டுமொத்த கிராம மக்களும் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.

இக்கிராமத்தில் 1,436 வாக்குகள் உள்ளன. நான்கு மணிநேரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கிராம மக்கள், அதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்குப் பிறகு வாக்கு செலுத்தியுள்ளனர்.

**பொட்டலூரணி, தூத்துக்குடி**

தூத்துக்குடி அருகே உள்ள பொட்டலூரணி கிராம மக்கள் அப்பகுதியிலுள்ள மீன் கழிவு ஆலைகளை மூடக்கோரி தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பொட்டலூரணி கிராமத்தில் ராணுவ வீரர்கள் மற்றும் காவல்துறையில் பணியாற்றுபவர்கள் அதிகம் வசிக்கின்றனர். இந்தக் கிராமத்தைச் சுற்றி மூன்று தனியார் மீன் கழிவு ஆலைகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆலைகளில் இருந்து வெளியேறும் துர்நாற்றம் மற்றும் இரவு நேரங்களில் வெளியேறும் நச்சுப்புகை காரணமாக அந்த கிராமத்தில் உள்ள குழந்தைகள், நோயாளிகள், பொதுமக்கள் ஆகியோர் மூச்சுத் திணறல் மற்றும் பல்வேறு சுவாசக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு வருவதாக அங்கு வசிக்கும் மக்கள் கூறுகின்றனர்.

இந்த மீன் கழிவு ஆலைகளை மாவட்ட நிர்வாகம் உடனடியாக மூட வலியுறுத்தி கடந்த மூன்று ஆண்டுகளாக பொட்டலூரணி கிராம மக்கள் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் மாவட்ட நிர்வாகம் இதுவரை இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றுகூறி கிராம மக்கள் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்து வீடுகள் மற்றும் பல்வேறு பகுதிகளில் கருப்புக் கொடிகளைக் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டு




வருகின்றனர்.

இந்நிலையில் அந்த மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சென்ற தமிழக மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை காரை விட்டே இறங்கவிடாமல் அந்த மக்கள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

அந்தக் கிராமத்தில் மொத்தம் உள்ள 931 வாக்குகளில், 15 வாக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளன.

**கடவரஹல்லி கிராமம், கிருஷ்ணகிரி**

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையை அடுத்த மேடு அக்ரஹாரம் பஞ்சாயத்தில் உள்ள கடவரஹல்லி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு இன்னும் அடிப்படை வசதிகள் இல்லை என்று பலமுறை கேட்டும் அரசாங்கம் வசதிகளைச் செய்து தரவில்லை என்று கூறி தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தங்கள் கிராமத்துக்கு பேருந்து வசதி இல்லாததால், அருகில் இருக்கும் நகரத்துக்குச் செல்ல 5 கி.மீ. தொலைவு நடந்து சென்று பஸ் ஏற வேண்டிய நிலை உள்ளதாக அக்கிராம மக்கள் கூறுகின்றனர்.

மேலும் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா, குடிநீர் வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லையென்றும், பல முறை அவற்றைச் செய்துதரக் கேட்டும் அரசு செவிசாயிக்காததால் கடவரஹள்ளியில் உள்ள 520 வாக்காளர்களும் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளனர்.

இதை அறிந்த கலால் டி.எஸ்.பி சிவலிங்கம் மற்றும் காவல் துறையினர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர். இந்நிலையில் 4 மணி வரை வாக்கு செலுத்த முன்வராத மக்கள், அதற்குப் பின்னர் முன்வந்து தேர்தல் புறக்கணிப்பைக் கைவிட்டு வாக்கு செலுத்தியுள்ளனர்.

**நடுக்குப்பம், விழுப்புரம்**

விழுப்புரம் நடுக்கப்பம் பகுதியில் உள்ள திரௌபதி அம்மன் கோவிலில் திருவிழா நடத்துவது தொடர்பாகப் பல ஆண்டுகளாக பிரச்னை நீடித்து வந்தது. இதில் அரசு நிர்வாகம் எந்தத் தீர்வையும் எட்ட உதவி செய்யாததால் அந்தப் பகுதி மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்திருந்தனர்.

இங்கு 1500க்கும் மேற்பட்ட மக்கள் உள்ள நிலையில், மாவட்ட நிர்வாகம் இந்தப் பிரச்னையில் விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்ததன் பேரில், மக்கள் அனைவரும் மாலையில் கூட்டமாக வாக்களிக்க வந்துவிட்டனர்.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வாக்குப் பதிவு முடியும் நேரத்தில் வாக்குச் சாவடியில் குவிந்ததால் தேர்தல் அதிகாரிகள் சிரமப்பட்டு அந்த மக்கள் வாக்கு செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளனர்.

**கே.கரிசல்குளம், தென்காசி**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள கே.கரிசல்குளம் கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்து தராத மாவட்ட நிர்வாகத்தைக் கண்டித்து மக்கள் தேர்தலைப் புறக்கணித்தனர். அக்கிராமத்தில் மொத்தம் 1,045 ஓட்டுகள் உள்ள நிலையில், 10 ஓட்டுகள் மட்டுமே பதிவாகி உள்ளன.

**அவளூர், ராணிப்பேட்டை**

ராணிப்பேட்டை மாவட்டம் அவளூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி 292இல் 35 ஓட்டுகள் மட்டுமே பதிவாகியுள்ளன.

அவளூர் பகுதியில் சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகளைத் தடுக்க மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும் என நீண்ட நாட்களாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

ஆனால் எவ்விதத் தீர்வும் எட்டப்படாததால் அப்பகுதி மக்கள், தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.

அங்கு மொத்தமாக 1279 வாக்குகளில் 35 வாக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மோத்தக்கல், திருவண்ணாமலை**

திருவண்ணாமலை அருகே மோத்தக்கல் கிராமத்தில் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வசித்து வரும் நிலையில் மாலை 5 மணி வரை 5 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என்று கூறி மக்கள் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.







# 9 லட்சம் எஃப்.ஐ.ஆர்-54 ஆயிரம் காவலர்கள் விவரம் திருட்டா?

## தமிழ்நாடு போலீஸ் செயலி மீது சைபர் தாக்குதல்!



மே 3, 2024 வெள்ளிக்கிழமை அன்று, தமிழ்நாடு காவல்துறையின் முக அடையாள மென்பொருள் செயலி (Face recognition software—எப்ஆர்எஸ்) ஹேக் செய்யப்பட்டு, அதிலிருந்த தகவல்கள் டார்க் வெப் தளத்தில் விற்பனைக்காக பதிவேற்றப்பட்டுள்ளன என்று பால்கன்ஃபீட்ஸ் (Falconfeeds) எனும் நிறுவனம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

சைபர் பாதுகாப்பு மீறல் நடந்துள்ளது உண்மைதான் என சென்னை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது. உடனடியாக தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது, இந்த சம்பவம் குறித்து சென்னை சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக கடந்த வருடம் செப்டம்பர் மாதம், தமிழ்நாடு காவல்துறையின் கிரைம் அண்ட் கிரிமினல் டிராக்கிங் நெட்வொர்க்ஸ் அண்ட் சிஸ்டம்ஸ் (CCTNS— சிசிடிஎன்எஸ்) இணையதளம் ஹேக் செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் மீண்டும் தமிழ்நாடு காவல்துறையை குறிவைத்து சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முக அடையாள மென்பொருள் செயலி என்றால் என்ன? அதிலிருந்து எந்தெந்த தகவல்கள் திருடப்பட்டுள்ளன? இத்தகைய சைபர் தாக்குதல்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்ன?

### முக அடையாள மென்பொருள் செயலி (எப்ஆர்எஸ்)

தமிழ்நாடு காவல்துறையின் சிசிடிஎன்எஸ் தரவுத் தளத்திலிருந்து தேடப்படும் நபர்கள், காணாமல் போனவர்கள் மற்றும் அடையாளம் தெரியாத இறந்த உடல்களை முக அடையாளம் மூலம் கண்டுபிடிக்க எப்ஆர்எஸ் மென்பொருள் செயலி பயன்படுகிறது. இந்த எப்ஆர்எஸ் மென்பொருள் கொல்கத்தாவின் மத்திய உயர்கணிணி மேம்பாட்டு மையத்தால் உருவாக்கப்பட்டது என தமிழ்நாடு காவல்துறை கூறுகிறது.

தமிழ்நாடு முழுவதும் 46,112 காவலர்களால் இந்த எப்ஆர்எஸ் மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

இந்த செயலியில் ஏற்பட்ட சைபர் பாதுகாப்பு மீறலால் 62 ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 54,828 காவலர்களின் அதிகாரப்பூர்வ விவரங்கள் டார்க் வெப் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்கிறார், பால்கன்ஃபீட்ஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரி நந்தகிஷோர் ஹரிகுமார்.

பால்கன்ஃபீட்ஸ் என்பது தொழில்நுட்ப ரீதியிலான அச்சுறுத்தல்கள் குறித்த நுண்ணறிவு வழிகாட்டுதல்களை வழங்கும் ஒரு நிறுவனம். அமெரிக்கா மற்றும் இந்தியாவில் இயங்கும் இந்நிறுவனம் டார்க் வெப் தளங்களில் வெளியிடப்படும் தகவல்களை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

“12 லட்சம் வரிகள் கொண்ட தரவுகள் திருடப்பட்டுள்ளன. வலேரி என்ற குழு, இந்த சைபர் பாதுகாப்பு மீறலுக்கு பொறுப்பேற்றுள்ளது. மொத்தம் 54,828 தமிழக காவலர்களின் பயனர் ஐடி, பயனர் பெயர், முழு பெயர், அவர்கள் பணியாற்றும் காவல் நிலையம் குறித்த விவரங்கள், முகவரி, தொலைபேசி எண்கள் என அனைத்து விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. 2,738 காவல்நிலையங்கள் குறித்த விவரங்களும் இதில் இருக்கின்றன.

குறிப்பாக 8,98,352 முதல் தகவல் அறிக்கைகளின் (எப்ஐஆர்) விவரங்கள் திருடப்பட்டுள்ளன. இதில் புகார் கொடுத்தவர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர், வழக்கை விசாரிக்கும் அதிகாரி என அனைவரின் விவரங்களும் உள்ளன. இவை தவறானவர்களின் கைகளுக்கு சென்றால் கண்டிப்பாக மிகப்பெரிய பிரச்னை ஏற்படும்” என்கிறார் ஹரிகுமார்.

### தரவுகள் திருட்டால் ஏற்படும் பாதிப்புகள்

வலேரி ஹேக்கிங் குழுவால் திருடப்பட்ட தகவல்களில் அதிகாரிகள், காவலர்கள் குறித்த விவரங்கள் மட்டுமல்லாது, பொதுமக்களின் விவரங்களும் இருப்பதால் இதுவொரு தீவிரமான பிரச்னை தான் என்கிறார் ஹரிகுமார்.

தொடர்ந்து பேசுகையில், “எப்ஆர்எஸ் செயலியில் ஒருவரது படத்தைப் பதிவேற்றி, தேடினால் அவரைக் குறித்த எச்சரிக்கை மற்றும் தகவல்கள் காவலர்களுக்கு கிடைக்கும். அவ்வாறு 2,35,753 தேடல்கள் குறித்த அனைத்து விவரங்களும், அதன் முடிவுகளும் திருடப்பட்டு டார்க் வெப் தளத்தில் விற்பனைக்கு உள்ளன.

எப்ஐஆர்களில் இருக்கும் தனிப்பட்ட அடையாள விவரங்கள் (குற்றம் சாட்டப்பட்டவர்கள் அல்லது சந்தேகத்திற்குரிய நபர்களின்) மூலம் சம்மந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் வாய்ப்பும் உள்ளது.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட காவல் நிலையத்திலிருந்து அழைக்கிறோம் என்று கூறி, தனிப்பட்ட அடையாள விவரங்களுடன், வழக்கின் விவரங்களையும் கூறும்போது, அதை நம்பி மக்கள் பணம் செலுத்தலாம். இது மிகப்பெரிய மோசடிக்கு வழிவகுக்கும்” என்று கூறினார் நந்தகிஷோர் ஹரிகுமார்.

### குற்றவாளிகளின் தரவுகள் கசிந்தால் என்னவாகும்?

புலனாய்வு நுட்பங்களின் போக்கில் டிஜிட்டல் தடயங்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில், இத்தகைய சைபர் பாதுகாப்பு மீறல்கள் குறித்த விழிப்புணர்வு பலருக்கும் இல்லை என கவலை தெரிவிக்கிறார் சைபர் சட்ட வல்லுநரும், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞருமான வி.பாலு.

“இன்று பல புலனாய்வு அமைப்புகளின் விசாரணையில் முக்கிய பங்கு வகிப்பது டிஜிட்டல் தடயங்கள் தான். ஒரு குற்றவாளியின் கைரேகை, கால் பாத ரேகை, கண் விழித்திரைப் பதிவு, டிஎன்ஏ என எல்லாவற்றையும் டிஜிட்டல் வடிவில் தொகுத்து, 75 ஆண்டுகள் வரை அதை சேமித்து வைக்க அனுமதி அளிக்கும் Criminal procedures identification act என்ற சட்டத்தை 2022ஆம் கொண்டு வந்தார்கள்.

இவ்வாறு டிஜிட்டல் வடிவில் சேகரிக்கப்படும் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் அந்நிய நாட்டு சக்திகளிடம் அல்லது கிரிமினல் கும்பல்களிடம் சிக்கினால், போதை மருந்து கடத்தல் முதல் பயங்கரவாதம் வரை அவர்கள் இந்தத் தரவுகளை வைத்து தங்களது நாசகர வேலைகளுக்கு தேவையான நபர்களை எளிதாக அடையாளம் கண்டு, அவர்களைத் தொடர்புகொள்ள முடியும்” என்கிறார் வி.பாலு.

தொடர்ந்து பேசிய அவர், “இந்த டிஜிட்டல் தடயங்கள் மற்றும் தரவுகள் என்பது இன்றைய நிலையில் மனிதர்களின் மிகப்பெரிய சொத்து. அதிலும் அரசிடமிருந்து ஒரு தனி மனிதனின் அடையாளத்தைத் திருடுவது மிகப்பெரிய குற்றம். எனவே, அரசும் அதிகாரிகளும் இதை தீவிரமான பிரச்னையாக எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும்.

இந்தத் துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு சைபர் கிரைம் சார்ந்த பயிற்சிகள், படிப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்புணர்வுவையும் ஏற்படுத்த வேண்டும்” என்று கூறினார் வி.பாலு.

### அரசுத்துறை தளங்கள் குறிவைக்கப்படுவது ஏன்?

"தொலைபேசி எண்கள், முகவரி என்பதைத் தாண்டி ஒருவரின் அங்க அடையாளங்கள் முதற்கொண்டு அனைத்து அடிப்படை தகவல்களும் டார்க் வெப்பில் விற்பனைக்கு கிடைப்பது என்பது மிகவும் தீவிரமாக அணுகப்பட வேண்டிய ஒரு இணைய அச்சுறுத்தல்" என்று கூறுகிறார் இணையக் குற்றத் தடுப்பு வல்லுநர் முரளி கிருஷ்ணன் சின்னதுரை.

"கடந்த சில மாதங்களாக ஒரு புது வகையான மோசடி நடைபெறுகிறது, ஒருவருக்கு தொலைபேசியில் அழைத்து, 'உங்கள் பெயரில் போதைப் பொருள் பார்சல் ஒன்று விமான நிலையத்தில் வந்துள்ளது' என்று கூறி மிரட்டுவது. இவ்வாறு ஒருவரிடம் பேசுவதற்கு முன் அவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தையும் சேகரிப்பார்கள்.

ஒருவரது கடந்த கால தகவல்களுக்கு ஏற்றவாறு தான் இந்த மோசடிகள் செயல்படுத்தப்படுகின்றன. அத்தகைய தனிப்பட்ட தகவல்களை டார்க் வெப்பில் விலை கொடுத்து வாங்க ஒரு பெரும் சமூக விரோதக் கூட்டமே தயாராக இருக்கிறது" என்கிறார் முரளிகிருஷ்ணன்.

பொதுவாக சைபர் தாக்குதல்களில் அதிகமாக குறிவைக்கப்படுவது அரசின் தரவு தளங்களே. இதற்கு காரணம் என்னவென அவரிடம் கேட்டபோது, "அரசு அலுவலகங்களின் டிஜிட்டல் சாதனங்களுக்கு என போதிய முதலீடுகள் இருப்பதில்லை. பல வருடங்களுக்கு ஒரே சாதனங்களையே பயன்படுத்துகிறார்கள்.

உதாரணமாக ஒரு இணைய திசைவியை (router) அவ்வப்போது மாற்ற வேண்டும், அதே போல இணைய சர்வர்களையும் மாற்ற வேண்டும். ஆனால் அதைச் செய்வதில்லை. தொழில்நுட்பம் ஒருபக்கம் அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்க, இந்த பழைய சாதனங்களை வைத்துக்கொண்டு அரசுத் துறைகள் திணறுகின்றன. டிஜிட்டல் யுகத்தில் பொதுமக்களின் தரவுகள் சார்ந்த விஷயத்தில் சுணக்கம் காட்டாமல், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அரசுத் துறைகளில் இதற்கென நிதி ஒதுக்க வேண்டும்” என்று கூறினார்.

“வேடிக்கையான விஷயம் என்னவென்றால் கடவுச்சொல்லை கூட அவ்வப்போது மாற்றாமல், குழுவாக ஒரே கடவுச்சொல்லை பயன்படுத்துவார்கள். இப்படி இருந்தால் சைபர் தாக்குதல்கள் எளிதாக நடைபெற தான் செய்யும்.

அரசு அலுவலகங்களில் சைபர் பாதுகாப்பு விதிகள் ஒழுங்காக பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய குறிப்பிட்ட மாதங்களுக்கு ஒருமுறை தொழில்நுட்ப வல்லுநர் குழு மூலம் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்” என்று வலியுறுத்துகிறார் முரளிகிருஷ்ணன்.

### தமிழ்நாடு காவல்துறை கூறுவது என்ன?

தமிழ்நாடு காவல்துறையின் முக அடையாள மென்பொருள் செயலி ஹேக் செய்யப்பட்டு, விவரங்கள் திருடப்பட்டுள்ளது தொடர்பாக சென்னை காவல்துறை தலைமை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பால்கன்ஃபீட்ஸ் எனும் தளத்தில் தமிழ்நாடு காவல்துறையின் முக அடையாள மென்பொருள் செயலியில் சைபர் பாதுகாப்பு மீறல் நடந்துள்ளதாக செய்தி வெளியிடப்பட்டது.

எப்ஆர்எஸ் செயலி ஜிழிஷிஞ்சி—எல்காட் மூலம் ஹோஸ்ட் செய்யப்பட்டுள்ளது. சமீபத்திய தணிக்கை தமிழ்நாடு மின்—ஆளுமை முகமை மூலம் 13.03.2024 அன்று மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்ட விசாரணையில் அட்மின் கணக்கின் கடவுச்சொல் திருடப்பட்டதால் இது நடந்தது என தெரியவந்துள்ளது. அதன் மூலம் பயனர்களுக்கான ஐடியை உருவாக்குதல், எவ்வளவு தேடுதல் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டது மற்றும் முன் முனை (Front end) விவரங்களை மட்டுமே பார்க்க முடியும்.

இதுதொடர்பாக எல்காட், தமிழ்நாடு மின்—ஆளுமை முகமை மற்றும் கொல்கத்தாவின் மத்திய உயர்கணிணி மேம்பாட்டு மையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பு நடவடிக்கையாக அட்மின் கணக்கு தற்காலிகமாக நீக்கப்பட்டது. இது குறித்து சென்னை சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# வழக்குகளில் இழப்பீடு வழங்க உத்தரவு பிறப்பிக்காவிட்டால் சட்டப்பணிகள் ஆணையக்குழு மூலம் தீர்வு காண சட்டத்தில் இடமுண்டு உச்சநீதிமன்ற நீதிபதி சஞ்ஜிவ் கண்ணா தகவல்!




வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க சம்பந்தப்பட்ட நீதிபதி எந்த உத்தரவும் பிறப்பிக்காவிட்டால், சட்டப் பணிகள் ஆணைக்குழு மூலமாக அந்த வழக்கை மீண்டும் விசாரித்து தீர்வு காண சட்டத்தில் இடமுண்டு என உச்ச நீதிமன்ற நீதிபதியும், தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு செயற்குழு தலைவருமான சஞ்ஜிவ் கண்ணா தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் உள்ள மாவட்டசட்டப்பணிகள் ஆணைக்குழுக்களின் செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம் மற்றும் மத்தியஸ்த சட்டம் —2023 குறித்த ஒருநாள் சிறப்பு பயிற்சியரங்கம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதியும், தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயற்குழு தலைவருமான சஞ்ஜிவ் கண்ணா இக்கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசியதாவது: கடந்த 2005—ம்ஆண்டு மத்தியஸ்தம் என்ற நடைமுறையே ஒத்துவராது என வழக்கறிஞர்கள் போர்க்கொடி தூக்கி எதிர்ப்புதெரிவித்தனர். ஆனால் தற்போது அந்த நிலை மாறிவிட்டது. இதில் 48 சதவீதம் வெற்றி பெற்றிருக்கிறோம். மத்தியஸ்தத்துக்கு பிறப்பிடமே சென்னை உயர் நீதிமன்றம்தான். இதற்கு பல்வேறு திறமைகள் தேவைப்படுகிறது. உளவியலுடன் கூடிய போதுமான சட்ட அறிவு இருக்க வேண்டும். பல்வேறு பிரச்சினைகளுக்கு பாரபட்சம் இல்லாத சிறந்த தீர்வாக மத்தியஸ்தம் இருக்கிறது என்பது எனது தனிப்பட்ட கருத்து.

தற்போதைய நிலையில் மாவட்ட நீதிமன்றங்களில் 2.37 கோடி வழக்குகளும், உயர் நீதிமன்றங்களில் 20.67 லட்சம் வழக்குகளும், உச்ச நீதிமன்றத்தில் 52 ஆயிரத்து 660 வழக்குகளும் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகள் முடிவுக்கு வர எத்தனை நாட்களாகும் எனக்கூறுவதற்கு எந்த புள்ளிவிவரமும் நம்மிடம் இல்லை. ஆனால் மத்தியஸ்தம் மூலமாக இவற்றை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடியும்.

இந்த நிலுவை வழக்குகளில் மாவட்ட நீதிபதி 25 ஆயிரத்து 129 வழக்குகளையும், உயர் நீதிமன்ற நீதிபதி 2 ஆயிரத்து 636 வழக்குகளையும், உச்ச நீதிமன்ற நீதிபதி 1,538 வழக்குகளையும் தொய்வின்றி விசாரித்தால் மட்டுமே நிலுவை எண்ணிக்கை குறையும் என்றால் அது சாத்தியமற்றது.

இதற்கு மாற்றாக லோக்—அதாலத் சிறந்த தீர்வை தந்து கொண்டிருக்கிறது. லோக்—அதாலத் மூலமாக கடந்தாண்டு மட்டும் லட்சக்கணக்கான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. லோக்—அதாலத் பற்றிய விழிப்புணர்வு பட்டி, தொட்டியெங்கும் சென்றடைந்துள்ளது. லோக்—அதாலத் மூலமாக பிரச்சினைக்கு உடனடி தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு வந்துள்ளது.

சுமார் 35 லட்சம் வழக்குகளில் 10 முதல் 11 லட்சம் வழக்குகள் மத்தியஸ்தம் மூலமாக தீர்வு காணப்பட்டுள்ளன. ஆன்லைன் மூலமாகவும் மத்தியஸ்தம் செய்யும்திட்டம் விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

குழந்தை திருமணங்கள் கொடுங்குற்றம். அதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அதேபோலவழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவேண்டும் என சம்பந்தப்பட்ட நீதிபதி எந்த உத்தரவும் பிறப்பிக்காவிட்டால், சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலமாக அந்த வழக்கை மீண்டும் விசாரித்து இழப்பீடு வழங்க சட்டத்தில் இடமுண்டு. இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வுகளுக்கு தலைமை வகித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா பேசும்போது, “தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டப் பணிகள் ஆணைக்குழு மூலமாக கைதிகளுக்கான சட்ட உதவி உட்பட 19 திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம். கடந்தாண்டு ஜனவரி முதல்கடந்த பிப்ரவரி வரை இலவச சட்ட உதவி கோரி 51 ஆயிரத்து 824 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில், 48 ஆயிரத்து 352 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. லோக் அதாலத் மூலமாக 3.53 லட்சம் வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு ரூ.2 ஆயிரத்து 652 கோடி இழப்பீடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல் மத்தியஸ்த மையம் சென்னையில்தான் அமைக்கப்பட்டது. அந்த முதல் மைய அறையை நினைவு சின்னமாக பாதுகாத்து வருகிறோம். தமிழகத்தில் ஏற்கெனவே 32 சமரச தீர்வு மத்தியஸ்த மையங்கள் செயல்பட்டு வரும் நிலையில் புதிதாக 17 மையங்கள் தொடங்கப்படவுள்ளன. அதேபோல வழக்கறிஞர்களுக்கு 'மத்தியஸ்தம் சட்டம் — 2023' பற்றி அதிகம் தெரிந்திருக்க வேண்டும் என்றார்.

மாலையில் நடந்த நிறைவு விழாவில் உச்ச நீதிமன்ற நீதிபதி பி.ஆர்.கவாய் பங்கேற்று பேசினார். முன்னதாக இக்கருத்தரங்கில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். மகாதேவன் வரவேற்க, நீதிபதிடி.கிருஷ்ணகுமார் நன்றி தெரிவித்தார். நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், என்.சதீஷ் குமார், ஜி.கே.இளந்திரையன், டி.பரத சக்ரவர்த்தி, உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ராம் பஞ்சு உள்ளிட்ட பலர் பங்கேற்று பேசினர்.

இக்கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாம் ஏற்பாடுகளை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் எம்.ஜோதிராமன், மாநில சமரச தீர்வுமைய இயக்குநர் கே.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலர்கள் ஏ.நசீர் அகமது, ஜி.டி.அம்பிகா, உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலர் கே.சுதா உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

# அணைகளில் தொடர்ந்து குறைந்து வரும் நீர்மட்டம்-குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம்?

கோவை மாநகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரமான, சிறுவாணி, பில்லூர் மற்றும் ஆழியாறு அணைகளின் நீர்மட்டம் குறைந்துள்ளது. இது குடிநீர் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தின் அதிக மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகளில் கோவையும் ஒன்று. மாநகராட்சியுடன் சேர்த்து கோவை மாவட்டத்தில் மொத்தம் 35 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உள்ளனர்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஆனைகட்டி அருகே கேரள மாநில கட்டுப்பாட்டில் உள்ள சிறுவாணி அணை, மேட்டுப்பாளையம் அடுத்த பில்லூர் அணை மற்றும் ஆழியாறு அணை ஆகியவை தான் மாநகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளன.

மாநகராட்சி தவிர்த்து மாவட்டத்தின் மற்ற பகுதிகளான பொள்ளாச்சி, கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகளுக்கு ஆழியாறு அணை முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது.

### கோவையின் குடிநீர் விநியோகம் எப்படி நடக்கிறது?

கோவை மாநகராட்சி பகுதிகளுக்கு சிறுவாணி, பில்லூர் 1, 2, 3—வது திட்டங்கள், வடவள்ளி கவுண்டம்பாளையம் மற்றும் ஆழியாறு கூட்டுக் குடிநீர் திட்டங்களில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

இப்படியான நிலையில், கடந்த ஆண்டு போதிய பருவமழை பெய்யாதது மற்றும் இந்த ஆண்டு கோடை மழை பெய்யாதது போன்ற காரணங்களால், கோவையின் நீராதாரமாக உள்ள சிறுவாணி, பில்லூர் மற்றும் ஆழியாறு அணைகளின் நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதனால், அணைகளில் இருந்து பெறப்படும் நீரின் அளவு குறைந்து, மக்களுக்கு வாரம் ஒருமுறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

சிறுவாணி அணையைப் பொறுத்தவரை, மொத்தம் உள்ள 45 அடியில், ஏப்ரல் 30ஆம் தேதி நிலவரப்படி, 12 அடிக்கு மட்டுமே நீர் மட்டம் உள்ளது. பில்லூர் அணையின் மொத்த நீர்மட்டம் 100 அடி. இதில் 55.25 அடிக்கு மட்டுமே நீர்மட்டம் உள்ளது. அதேபோல், ஆழியாறு அணையின் மொத்த கொள்ளளவான 120 அடியில், 58.70 அடி உயரத்திற்கு மட்டுமே நீர் உள்ளது.

### 'இந்த ஆண்டு மழை பெய்யாததால் சிக்கல்'

இந்த நிலையில், கோவை மாவட்டத்தின் குடிநீர் பற்றாக்குறை குறித்து, மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கைப்படி, சிறுவாணி அணைப் பகுதியில் 2023 ஏப்ரல் மாதம் 95 மில்லிமீட்டர் மழை பதிவானது, பில்லூர் அணைப்பகுதியில் 2189.64 மி.மீ. மழையும், ஆழியாறு அணைப் பகுதியில் 41.80 மி.மீ. மழையும் பதிவானது. ஆனால், இந்த ஆண்டு சிறுவாணி, பில்லூர் மற்றும் ஆழியாறு அணைப் பகுதியில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் மழை பெய்யாததால், அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது.

இதனால், "சிறுவாணி அணையில் இருக்கின்ற நீரை ஜூன் வரை வழங்குவதற்காக, அணையில் இருந்து நாள் ஒன்றுக்கு 104.4 எம்.எல்.டி பெறப்படுவதற்குப் பதிலாக 35 எம்.எல்.டி நீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்படும். இதேபோல், பில்லூர் அணையில் இருக்கும் நீரும் ஜூன் வரையில் வழங்க ஏற்பாடு செய்யப்படும். ஆழியாறு அணையில் தற்போது இருக்கும் நீர் கோடையைச் சமாளிக்கப் போதுமானதாக உள்ளது," என்று மாவட்ட ஆட்சியர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



குடிநீரை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

கோவை கணபதி பகுதியிலுள்ள இல்லத்தரசி ரம்ய பிரியா, ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் குறிப்பாக மே மாதம் வாரம் ஒருமுறை தங்கள் பகுதிக்கு குடிநீர் வழங்குவார்கள் என்றும் இந்த ஆண்டு 12 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாகவும் கூறுகிறார்.

"தினமும் குடிநீர் அல்லாத பயன்பாட்டுக்கு போர்வெல் நீர் வழங்கி வந்தனர். அதுவும் சரிவரக் கிடைக்காமல் உள்ளது," என்கிறார் ரம்ய பிரியா.

கோடையால் குடிநீர் தேவை அதிகரித்துள்ளதால், சேமிக்கும் நீர் விரைவில் தீர்ந்துவிடுவதாகக் கூறும் அவர், "650 ரூபாய் செலுத்தி டிராக்டரில் 1000 லிட்டர் நீர் விலைக்கு வாங்கிப் பயன்படுத்துவதுடன், குடிநீரை விலைக்கு வாங்கிப் பயன்படுத்துகிறோம். இதனால், வீட்டின் மாதச் செலவு அதிகரித்துள்ளது," என்றார்.

### 'பயன்பாட்டைக் குறைத்துள்ளோம்'

தங்கள் பகுதிக்கு வாரம் ஒருமுறைதான் குடிநீர் வழங்கப்படுவதாகவும் கிடைக்கும் நீரை குடிக்க, சமைக்க மட்டுமே சிக்கனமாகப் பயன்படுத்துவதாகவும் கூறுகின்றனர் கோவை ஆர்.எஸ். புரத்தைச் சேர்ந்த ராஜேஸ் கோவிந்தராஜலு, சுஜாதா தம்பதி. "குடிநீர் தட்டுப்பாட்டால் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது. குடிநீர் அல்லாத பயன்பாட்டுக்கான நீருக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், பாத்திரங்களின் பயன்பாட்டையும் வெகுவாகக் குறைத்துள்ளோம்," என்றனர்.

இந்த நிலையில், அரசு போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் விட்டதால் தான் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் விவசாயிகள் சங்கத்தினர்.

கௌசிகா நீர்க்கரங்களின் நிறுவனர் செல்வராஜ், "சிறுவாணி, பில்லூர் அணைகளில் கடந்த சில ஆண்டுகளாக வண்டல் மண் அதிகரித்து அணையின் நீர் சேமிப்புத் திறன் குறைந்துள்ளது. வண்டல் மண் எடுத்து அணைகளின் நீர்மட்டத்தை உயர்த்த அரசு தவறிவிட்டதால், இன்று நாம் நீரின்றி சிரமத்தைச் சந்திக்கிறோம்," என்றார்.

### அணைகளைத் தூர்வாரக் கோரிக்கை

நீர்நிலைகளைத் தூர்வாரி ஆழப்படுத்தினால் மட்டுமே இனி வரும் காலங்களை எதிர்கொள்ள முடியும் என்கிறார் செல்வராஜ்.

இதை விளக்கிய செல்வராஜ், "பருவநிலை மாற்றத்தால் கடந்த சில ஆண்டுகளாக நமக்கு முன்பு பெய்ததைப் போல பருவமழை கிடைப்பதில்லை. திடீரென சில நாட்களில் அதீத கன மழை தான் பொழிகிறது. இத்தகைய சூழலைச் சமாளிக்க தமிழ்நாடு அரசு சிறுவாணி, பில்லூர், ஆழியாறு அணைகளை முறையாகத் தூர்வாரி



கரைகளைப் பலப்படுத்த வேண்டும். அணைகளைப் போல குளங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்," எனக் கூறுகிறார்.

வறட்சியால் குடிநீர் பற்றாக்குறை பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளதாகவும், அதேபோல் விவசாயமும் பாதிப்புகளைச் சந்திப்பதாக தெரிவிக்கிறார், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கோவை மாவட்ட துணைத்தலைவர் பெரியசாமி.

''அணைகளில் தொடர்ந்து நீர்மட்டம் குறைந்து வருவதால், குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு திரும்பிய பக்கமெல்லாம் மக்கள் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர். குடிநீர் தட்டுப்பாடு ஒரு பக்கம் இருக்க நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போதிய நீர் கிடைக்காமல் விவசாயமும் கடுமையாகப் பாதித்துள்ளது," என்றார்.

### அதிகாரிகளின் விளக்கம்

விவசாயிகளின் குற்றச்சாட்டுகள் குறித்து, கோவை மண்டல பொதுப் பணித்துறை முதன்மைப் பொறியாளர் சிவலிங்கம் கூறுகையில்,

"அணைகள், குளங்களைப் பாதுகாப்பதற்காக சிறப்புத் திட்டங்கள் மூலம், வண்டல் மண் எடுத்து, கரைகளைப் பலப்படுத்தி தூர்வாரும் பணிகளைச் செய்து வருகிறோம். இந்த ஆண்டு மழைக்காலம் துவங்குவதற்கு முன்பு ஆழியாறு அணையில் வண்டல் மண் எடுத்து தூர்வாரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், குளங்களிலும் வண்டல் மண் எடுக்கப்படும்'' என்று கூறினார்.

மேலும், சிறுவாணி அணை கேரள மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால், கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அணையைத் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசுக்கு தெரிவித்துள்ளதாகவும், பில்லூர் அணையையும் தூர்வார அரசுக்கு கோரிக்கை அனுப்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

"கடந்த காலங்களில் இல்லாததைவிட தற்போது வெப்ப அலை அதிகமாக இருப்பதால், அணைகளில் நாள் ஒன்றுக்கு 10— 15 கன அடி நீர் ஆவியாகி வருகிறது. பருவமழை குறைவால் நீர் வரத்தும் இல்லை. ஆழியாறு அணையில் போதிய நீர் இருப்பதால் குடிநீருக்கு பிரச்னை இல்லை. ஆனால், பில்லூர், சிறுவாணியில் நீர் குறைந்து வருவதால் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது," என்றார் சிவலிங்கம்.

கோவை மாவட்ட குடிநீர் வடிகால் வாரிய முதன்மைப் பொறியாளர் செல்லமுத்து பேசுகையில், ''அணைகளில் நீர்மட்டம் பெருமளவு குறைந்துள்ளதால், வழக்கமாகப் பெறும் நீரின் அளவு குறைந்துள்ளது. கிடைக்கின்ற நீரை மக்களுக்குப் பகிர்ந்தளித்து வருகிறோம். குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு நிலத்தடி நீர் விநியோகம் செய்யப்படுகிறது. மக்கள் சிக்கனமாகப் பயன்படுத்தினால் மட்டுமே கோடையைச் சமாளிக்க முடியும்," என்றார்.

கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் கூறுகையில், "சிறுவாணி, பில்லூர் அணைகளைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டுமென தமிழ்நாடு அரசிடம் மாநகராட்சி சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கோவைக்கு வந்த முதன்மைச் செயலாளர்களிடமும் அணைகளில் வண்டல் மண் தேங்கியுள்ளதால் நீர் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடும் வறட்சி நிலவும் நிலையிலும், அணைகளில் இருக்கின்ற நீரை மாநகராட்சியின் மண்டலம் வாரியாக மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம்," என்றார்.

---

# வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் ஏழை மாணவர்களுக்கு இலவச திரைப்படக் கல்வி!

## வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் தகவல்!

திரைப்படக் கலையில் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு இலவச இளநிலை, முதுநிலை திரைப்படக் கல்வி வழங்க உள்ளதாக வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் தெரிவித்தார்.

சென்னை பல்லாவரத்தில் அமைந்துள்ள வேல்ஸ் பல்கலைக்கழகம், பன்னாட்டு திரை பண்பாட்டு மையம் இடையே, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச திரைப்படக் கல்வியை வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்கலைக்கழக வளாகத்தில் கையொப்பமானது.

அதன்படி, திரைப்படக் கலையில் ஆர்வம் கொண்ட ஏழை மாணவர்களுக்கு இளநிலை திரைப்படப் படிப்பு (3 ஆண்டுகள்), முதுநிலை திரைப்படம் மற்றும் கலாச்சாரப் படிப்புகள் (2 ஆண்டுகள்), ஊடகத் திறன்களில் முதுநிலை டிப்ளமோ (1 ஆண்டு) ஆகிய பாடப்பிரிவுகள் செயல்முறைக் கல்வியுடன் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திரைப்பட இயக்குநர் வெற்றிமாறன் பேசுகையில், "முதலில் ஒரு வருடத்திற்கு இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அது மாணவர்களின் வருகையை பொறுத்து புதுப்பிக்கப்பட்டு, கட்டணமின்றி கல்வி வழங்கப்படும். அது மட்டுமின்றி, முதல் பட்டதாரிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மேலும், அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளும் கட்டணமின்றி வழங்கப்படும்.




பொதுவாக மாணவர்கள் எந்த போதை பழக்கங்களுக்கும் அடிமையாகி விடக்கூடாது. அப்படி குறிப்பிட்ட சில பழக்கங்களுக்கு அடிமையாகும் நிலைமை ஏற்பட்டால், அதிலிருந்து வெளியே வருவதற்கான முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது, ஆன் லைன் மூலமாக இதன் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலாக விருப்பப்படும் மாணவர்கள் இதில் சேர்ந்து முழுமையாக கட்டணமின்றி பயிலலாம்'' என்றார் திரைப்பட இயக்குநர் வெற்றிமாறன்.

பின்னர் வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் பேசுகையில், "எங்கள் பல்கலைக்கழகத்தின் வகுப்பறைகள் வளாகம் மற்றும் கருவிகள் அனைத்தையும் நாங்கள் வெற்றிமாறனின் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் மேற்கொண்டதன் அடிப்படையில் கட்டணமின்றி வழங்குகிறோம். அவர் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார். அதன் பிறகு எங்கள் கல்லூரியின் சார்பாக மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

Published and Printed by Karthikeyan P and Printed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai-600 002 and Published at 13/25, 2nd Street, Sundharapuram, Puliyanthope, Chennai-600 012. Cell : 94444 01485 Editor: SRIDHAR